விலை : 20.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர். ஆண்டு 2048 புரட்டாதி 14 சனிக்கிழமை (30.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 285

## அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை

# தனிநாட்டு கோரிக்கையை சட்டபூர்வமாக்கும் முயற்சி

## பௌத்த சாசன செயற்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு) வடக்கு- கிழக்கு இணைப்பு குறித்து அரசியலமைப்பு பேரவையின் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் முன்னெடுக்கப்பட்ட யோசனையானது பிரிவினைவாதிகளின் தனிநாட்டு கோரிக்கையை சட்டபூர்வமாக்கும் முயற்சி என அமரபுர மகாநாயக்கரை உள்ளடக்கிய பௌத்த சாசன செயற்குழு குற்றம் சுமத்தியுள்ளது. (23-ம் பக்.)



## வித்தியா கொலையாளிகளுக்கு சிறைச்சாலையில் தாக்குதல்

(கண்டி)

மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஏழு பேரின் மீதும் சிறைச்சாலையில் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

வித்தியாவின் படுகொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு கைதிகளையும் நேற்று முன்தினம் மாலை தும்பறை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதன்போது அங்கிருந்த மரண தண்டனை கைதிகளால் தாக்குதல் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டதாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாணவி ஒருவரின் மீது கூட்டு பாலியல் வன்கொடுமை மேற்கொண்டமை காரணமாக 23

## புதிய அரசியலமைப்பில் சமஷ்டிக்கு இடமில்லை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் சமஷ்டி எண்ணக்கரு எவ்விதத்திலும் வெளிப்படுத்தப்படவில்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பாதகமான எந்தவொரு அரசியலமைப்பையும் தயாரிக்க 02



## காய்ச்சல் காரணமாக 11 மாதக் குழந்தை பரிதாபகரமாக பலி

(வவுனியா)

வவுனியா கல்மடு பகுதியை சேர்ந்த முத்துலிங்கம் கிறிஸ்ரிகா எனும் 11மாத குழந்தை காய்ச்சல் காரணமாக பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை காய்ச்சல் காரணமாக நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் வவுனியா 24

## அரசியல் கைதி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவர் நேற்றைய தினம் உடல்நிலை சோர்வடைந்த காரணத்தினால் சிறைச்சாலை வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரணவாயை சேர்ந்த மதியரசன் சுலக்ஸன் (வயது 30) 23

## பாதுகாப்பு படையினரையோ முகாம்களையோ அகற்ற முடியாது

### பாதுகாப்பு அமைச்சர் ருவன் விஜயவர்த்தன

(கொழும்பு)

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கில் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள படையினர் தொடர்பாக எந்த வித கருத்தை வெளியிட்டாலும் கவனத்தில் கொள்ளப் போவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொட 23



## பிரசவத்தின் போது இளம் தாய் மரணம்

### யாழ். போதனா வைத்தியசாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் கர்ப்பிணித் தாய் ஒருவர் பிரசவத்தின் போது உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

நயினாதீவைச் சேர்ந்தவரும் தற்போது கொக்குவிலில் வசிப்பவருமான திருமதி அமுதகௌரி கரன் (வயது 29) என்ற இளம் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 27-ம் திகதி புதன்கிழமை பிரசவம் நடந்த நிலை 02

## மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு ஜே.வி.பி முட்டுக்கொடுக்ககூடாது

### விமல் வீரவன்ச கோரிக்கை



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் நிறுவுநர் ரோஹண விஜயவீரவின் கொள்கையை ஒரு வீதமேனும் இன்னும் பின்பற்றி வருகின்றீர்கள் என்றால் பிரிவினைவாத அரசமைப்பை எதிர்த்து 04

## தமிழர் சார்ந்த விடயங்களை சீனா உன்னிப்பாக அவதானிக்கின்றது

### தமிழ் அரசியல் தரப்புடனும் தொடர்பை ஏற்படுத்த ஆர்வம்

(கொழும்பு)

இலங்கையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்தி கொள்வது தொடர்பில் சீனா ஆர்வம் கொண்டுள்ளது என சமகால உலக ஆய்வு நிலையம் மற்றும் சீன பட்டுப்பாதை சிந்தனை குழாமின் பணிப்பாளர் நாயகமுமான ஜின் ஷின் தெரிவித்துள்ளார்.

உத்தியோகப்பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீனா சென்றிருந்த இலங்கை தமிழ் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே பணிப்பாளர் நாயகம் ஜின் ஷின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூர் போரின் போது அரசாங்கத்திற்கு இராணுவ ரீதியில் சீனா உதவியமை மற்றும் போரின் பின்னரான காலப்பகுதி 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## புதிய அரசியலமை...

தான் இடமளிக்கப்போவதில்லை எனவும தற்போதிருக்கும் அரசியலமைப்பில் பௌத்த சமயம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு உறுப்புரையையும் நீக்குவதற்கோ, குறைப்பதற்கோ இடமளிக்கப்பட மாட்டாதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வண. கிராம்பே மங்கள தேரருக்கு மகாநாயக்கர் நியமன பத்திரத்தை வழங்கும் நிகழ்வு நேற்று அம்பாறை கெமுனுபுர பௌத்த நிலையத்தில் நடைபெற்ற போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பான முன்மொழிவுகளில் நாட்டை பிரிக்கும் விடயங்கள் எவையும் உள்ளடக்கப்படவில்லையென குறிப்பிட்ட ஜனாதிபதி, புதிய அரசியலமைப்பு தயாரிப்பு தொடர்பில் எந்தவொரு வரைபும் இதுவரை தயாரிக்கப்படவில்லை என்பதுடன் அனைவரினதும் கருத்துக்கள், முன்மொழிவுகள பெறப்பட்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை அனைத்து துறைகளிலும் கலந்துரையாடி, விவாதித்து, மீளாய்வு செய்ய வாய்ப்பளிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல், நிலையான சமாதானத்தை பேணுதல், மீளவும் போர் ஏற்படாதவாறு அனைத்து இனத்தவரிடையேயும் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் முதன்மை கவனம் செலுத்தி செயற்படுவதாகவும்,

மீளவும் போரொன்று ஏற்படும் என்ற கருத்து மக்கள் மத்தியில் ஏற்பட்டால் கூட நாடு இருண்ட யுகத்துக்கு தள்ளப்பட்டுவிடும் என தெரிவித்த ஜனாதிபதி அவ்வாறான எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்படாதவாறு அனைத்து இனங்களிடமும் சகவாழ்வையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் பாடுபடுவதுடன், அந்த முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு ஒரே மேசையில் ஒன்றுகூடி கலந்துரையாடுமாறு பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதத்தலைவர்களை வேண்டிக் கொள்வதாகவும் தெரிவித்தார். (மு-11)

## பிரசவத்தின் போது...

யில் பிரஸ்தாப பெண் மயக்கம் உற்றார். உடனடியாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்ட நிலையில்,

சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். பிரசவிக்கப்பட்ட குழந்தை ஆரோக்கியமாக இருப்பதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை பிரஸ்தாப இளம் தாயின் மரணம், சம்பந்தப்பட்ட மருத்துவப் பகுதியினரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாக பெற்றோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பிரஸ்தாப பெண்ணின் கணவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது. (ந)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வேலைவாய்ப்பு

கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் உள்ள ABY BAKE HOUSE & CREAM HOUSE இல் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

- விற்பனையாளர் (பெண்) கணனி அறிவு விரும்பத்தக்கது.
- உதவியாளர் (பெண்)

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு 01/10/2017 ஆம் திகதி காலை 7.30 மணி தொடக்கம் 10.00 மணிவரை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**076 528 4630**

(836)

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மராணி கோபாலச்சந்திரநாயகன்



கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மருதநகரை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பத்மராணி கோபாலச்சந்திரநாயகன் அவர்கள் 28.09.2017 அன்று அதிகாலை காலமானார்.

அன்னார் கோபாலச்சந்திரநாயகன் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்-கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவராஜசிங்கம்-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அழகரத்தினம்-திலகவதிநாயகம் அவர்களின் அன்பு மருமகளும், சாந்திகா (கொழும்பு), பிரதீபா (கால்நடை வைத்தியர்-பளை), செந்தூரன் முகாமையாளர் (SENKADAGALA FINANCE PLC-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜ்குமார் (கொழும்பு), டினேஸ் (கணக்காளர்-லண்டன்) ஜெயகலையரசி (கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாகர் (கொழும்பு இந்துக் கல்லூரி), நேத்ரா, துதித்ரா (யா-புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ராகவி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நரேந்திரசிங்கம், அகிலாண்டேஸ்வரி, கஜேந்திரசிங்கம், அமிர்தகௌரி, அமிர்தகாந்தி, இலங்கராணி, தாமிரவருணி, மங்களேஸ்வரி, தசவதி, திருக்கேதீஸ்வரி, கோணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சந்திரராணி, ஜெனச்சந்திரரத்தினம், காலஞ்சென்ற சந்திரபவானி மற்றும் திலகச்சந்திரரத்தினம், சந்திரவதனி, காலஞ்சென்ற அழகச்சந்திரநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணிக்கு திருநகர் பொதுமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-குடும்பத்தினர்.**

**பரவிப்பாஞ்சான்,**
**மருதநகர், கிளிநொச்சி**

**0243242993, 0776104892/**
**0770740351, 0775221118**

(சி-9795)

## மணிவிழா நாயகனை
## உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

### திரு.முத்துச்சாமி விக்கினேஸ்வரன்

Best Wishes



எமது கோப்பாய்க் கோட்டத்தின் அதிபர் சங்கத்தின் தலைவரும், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பரீட்சை அலுவலரும் ஆகிய திரு.முத்துச்சாமி விக்கினேஸ்வரன் அவர்கள் 2017.09.30ஆம் திகதி தனது மணிவிழாவைக் கொண்டாடுகிறார். அவர் தம் எதிர்காலம் சிறப்பாக அமைய உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

**வாழ்த்துவோர்:-**

**கோட்டக்கல்விப் பணிப்பாளரும், அதிபர்களும், ஊழியர்களும், அதிபர்கள் சங்கம் கோப்பாய் கோட்டம்.**

(சி-9801)

# நெஞ்சம் விட்டகலா முதலாம் ஆண்டு

தோற்றம்
11
05
1948

மறைவு
01
10
2016



"உரிமைக்குரல்"

### அமரர் மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதன்

**(முல்லைத்தீவு மகா வித்தியாலய முன்னாள் அதிபர், ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி, வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி அவைத் தலைவர்)**

ஓடி உருண்டது உம்மைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றோம் உம்மைப் பிரிந்து நிதம்.
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
எம் நெஞ்சத்தில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்

மக்கள் தொண்டனாய் நீராற்றிய சேவைகள்
என்றென்றும் நினைவிருக்கும்
உண்மைகளைச் சொல்ல தயங்காத உங்கள்
துணிவு மீது என்றும் மதிப்பிருக்கும்

*அன்னாரது முதலாவது ஆண்டு நினைவேந்தல் நாளை (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை இல்லத்தில் நடைபெறும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு அன்றைய தினம் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**மணல் குடியிருப்பு, முல்லைத்தீவு**

**குடும்பத்தினர்**

(சி-9808)

# வலி.வடக்கில் படையினர் வசமுள்ள பாடசாலைகளை விடுவிக்க இணக்கம்

வலி.வடக்கில் படையினர் வசமுள்ள பாடசாலைகள் சிலவற்றை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

உரிய இடங்களில் தற்போது கட்டடங்கள் இல்லாத காரணத்தினால் இடங்களை அடையாளப்படுத்துவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது எனவும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் படையினர் வசமுள்ள பாடசாலைகள், கோவில்கள் மற்றும் முக்கிய இடங்களை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்த கலந்துரையாடலின் போதே இராணுவத்தினர் இவ்வாறு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வலி.வடக்கு பகுதியில் இராணுவத்தினரின் வசமுள்ள பொதுமக்களின் நிலங்கள் பகுதி பகுதியாக விடுவிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் அப்பகுதியில் பொதுமக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நிலங்கள் விடுவிக்கப்படவில்லை.

அந்த வகையில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு அருகில் உள்ள பாடசாலைகள், கோவில்களை விடுவிக்குமாறு இராணுவத்தினரிடம் கோரப்பட்டதற்கு அமைய நேற்று முன்தினம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

வலி.வடக்கு பகுதியில் இதுவரை விடுவிக்கப்படாமல் இராணுவத்தினர் வசம் 10 பாடசாலைகள் உள்ளன. அவற்றில், விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு அருகில் உள்ள பாடசாலைகள் விடுவிக்கப்பட வேண்டுமென்றும்வயாவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, வயாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலயம், பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகியவற்றை விரைவில் விடுவிக்குமாறு கோரப்பட்டது.

சில பாடசாலைகள் குறிப்பிட்ட இடங்களில் தற்போது இல்லை எனவும் ஏனைய பாடசாலைகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்த படையினர், வயாவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை விரைவில் விடுவிப்பதற்கும் ஏனைய பாடசாலைகளை அடுத்தடுத்து விடுவிப்பதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளனர். எப்போது விடுவிக்கப்படும் என திட்டவட்டமாக அறிவிக்க முடியாது எனவும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பல கோவில்கள், பாடசாலைகள் தரை மட்டமாக காணப்படுவதால் குறித்த பகுதிகள் அடையாளப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் விடுவிக்கப்பட வேண்டிய முக்கிய இடங்களை அடையாளப்படுத்தி தருமாறு கேட்டுக்கொண்டனர்.

அந்த வகையில் முக்கிய இடங்களை அடையாளப்படுத்துவதற்கு அரச அதிபர் தலைமையில் அதிகாரிகள் உள்ளிட்ட குழு அமைக்கப்பட்டது. அவர்கள் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி முக்கிய இடங்களை அடையாளப்படுத்தி படையினருக்கு வழங்குமாறும் கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், யாழ் மாவட்ட அரச அதிபர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், முப்படையினர், அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் நாயால் இழுத்து செல்லப்பட்ட சிசு

கேர்கசோல்ட் தோட்ட - எல்பட கீழ் பிரிவில் பிறந்து ஒரு நாளேயான ஆண் சிசுவின் சடலமொன்றை நோர்வூட் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை மீட்டுள்ளனர்.

குடியிருப்புக்களை அண்மித்த வாசிகசாலைக்கு அருகிலுள்ள வீட்டுத் தோட்டமொன்றிலிருந்தே குறித்த சிசுவின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சடலத்தின் தலைப் பகுதியைக் காணவில்லை எனவும், சிசுவின் சடலத்தை நாய் ஒன்று இழுத்து செல்வதை கண்ட பிரதேச மக்கள் நோர்வூட் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்தே பொலிஸார் அதனை மீட்டுள்ளனர்.

குறித்த சிசுவின் தாயைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில், பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

### பாராளுமன்ற உறுப்பினர்

## விமலவீர திஸாநாயக்கவின் கார் மோதி ஒருவர் மரணம்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க பயணித்த கார் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அம்பாறை- கண்டி வீதியில் அம்பாறை, கரங்காவை ஜனரஜ வித்தியாலயத்திற்கு முன்னால் இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் விபத்தில் படுகாயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உகன, திஸ்ஸபுர பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் பாராளுமன்ற உறுப்பினருக்கு காயம் எதுவும் இல்லை என்பதுடன், சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரின் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (இ-3)

Pearson BTEC University of Wolverhampton UNIVERSITY OF CANBERRA RICS CIOB

UTP University Transfer Program

A/L இன் பின்னர்
20 வருடகால தொழிற்துறை சார்ந்த
உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான
BCAS Campus உடன் இணைந்து
UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...



Degree Progression to 339 universities in UK, USA, Australia etc.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

HND – BUSINESS MANAGEMENT MARKETING | HRM – Leading to BA (Hons) from the UK Universities
HND – QUANTITY SURVEYING – Leading to BSc (Hons) from the UK Universities
HND – BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY – Leading to BSc (Hons) from the UK Universities
HND – COMPUTING – Leading to BSc (Hons) from the UK Universities
HND – CIVIL ENGINEERING – Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LLB – LAW – Leading to LLB (Hons) from the UK Universities

Best Employer Brand Award 2017 · No.1 BTEC Centre in Sri Lanka 2016 · Best Academic & Industry Interface 2016 · Academic Impact Winner 2016

Tenny 0766 693 681
Sanchu 0777 102 131
INTAKE NOW ON

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna

SPECIAL OFFER DISCOUNT Rs. 200,000.00 · 20 YEARS

(சி-9788) 021 221 9910 | 011 259 7217 info@bcas.lk | www.bcas.lk

## மூன்றிலிரண்டு...

நாடாளுமன்றத்தில் செயற்பட வேண்டும். அரசமைப்புக்கு எதிராக இவர்கள் வாக்களிக்க வேண்டும்: அவ்வாறு இல்லாவிட்டால் இந்த நாட்டிற்கும் அதேபோல் மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைக்கும் பெரிய அழிவை ஏற்படுத்தும். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் விலைவாசியை குறைப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று தேங்காய் விலை, எரிவாயு விலை உள்ளிட்டு மக்களின் அன்றாட பொருள்களுக்கான விலை உயர்வை மேற்கொண்டு வருகின்றனர். ஒருபுறம் நாட்டின் மக்களுக்கு வயிற்றில் அடிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். மறுபுறம் பிரிவினைவாதிகளுக்கு வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்கும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரிவினைவாத செயற்பாட்டைத் தடுத்த, கூட்டாட்சியின் விளைவுகளை நாட்டுக்குக் கற்பித்த, ஒற்றையாட்சியை உருவாக்க போராடிய ரோகண விஜயவீர உருவாக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் நிகழ்கால தலைவர்களிடம் நாம் கேட்பது ஒன்றேயாகும். ரோஹண விஜயவீரவின் கொள்கையை ஒரு வீதமேனும் இன்னும் பின்பற்றி வருகின்றீர்கள் என்றால் இந்தப் பிரிவினைவாத அரசமைப்பை எதிர்த்து நாடாளுமன்றத்தில் செயற்பட வேண்டும்.

அரசமைப்புக்கு எதிராக இவர்கள் வாக்களிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந்த நாட்டுக்கும் அதேபோல் மக்கள் விடுதலையின் கொள்கைக்கும் பெரிய அழிவை ஏற்படுத்தும். இதனை மறந்துவிடாது செயற்படவேண்டும் என்றார். (மு-11)

## மரண அறிவித்தல்

மண்ணில்
1945 - 03 - 15



விண்ணில்
2017 - 09 - 29

### தாவீது திருச்செல்வம் (பொன்னுக்கண்டு)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாவீது திருச்செல்வம் (பொன்னுக்கண்டு) நேற்று (29.09.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாவீது - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாவீதுராசா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் விக்றோரியா ராணியின் அன்புக் கணவரும் டொன் லூயிஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயாணி, சுதர்சினி, பற்றிக் குறூஸ், மார்ஜி பிறின்சி, சார்ள்ஸ் குறூஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் சயல் (RDA) சுஜாதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற குணரத்தினம், இராஜேஸ்வரி, பேரின்பநாதன் (வலம்புரி), செல்வராசா, தங்கராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ஞானவெளிச்சம், ஸ்ரனிஸ்லாஸ் (சுவிஸ்), அருட்சகோதரி செபமலர், புஸ்பராணி, ரவிநாயகி (சிங்கப்பூர்), மேரி யோகராணி (ஆசிரியர்), செல்வநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருவுடல் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி
### கந்தப்பு
### பொன்னம்மா



வல்லிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தப்பு பொன்னம்மா 28.09.2017 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தப்புவின் அன்பு மனைவியும் திருக்கேதீஸ்வரநாதன் (பொறியியலாளர் - கொழும்பு), கௌரிமலர் (உப தபால் அதிபர்-புலோலி), நல்லைநாதன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தலிங்கம், விஜிதா, வாசுகி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அகிலன் (பொறியியலாளர் - லண்டன்), சர்வதனன் (லண்டன்), வினோதன் (கொழும்பு), தேவகி (லண்டன்), கிருபன் (கொழும்பு), கிரிசான் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2017) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வல்லிபுரம்,
புலோலி.

தகவல்:- குடும்பத்தினர்
077 446 9807, 021 205 6633


## TCT Multi Trade Centre
இல் காணப்படும்
## உடனடி பதவி வெற்றிடங்கள்

**காசாளர் (Cashier)** - பெண்கள்

குறைந்தபட்ச கல்வித் தகைமை A/L
(யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் மாத்திரம்)

**விற்பனை உதவியாளர் (Sales Assistant)** - ஆண்கள்

**ஆட்டோ சாரதி (Auto driver)**

(தங்கியிருந்து வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**சுத்திகரிப்பு தொழிலாளி (Cleaning worker)**

**சமையலாட்கள்**

**பாதுகாப்பு உத்தியோகத்தர் (security)**



**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**

தொடர்புகளுக்கு:-
**TCT Multi Trade Centre**
527, Navalar Road, Nallur, Jaffna.
077 776 3436
(C-9804)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




### பாக்கியநாதன் சசிகுமார் அவர்கள்
(ICT ஆசிரியர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

19.09.2017 அன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி மாண்புமிகு ஜெ.கஜநிதிபாலன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர்வுகள் அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்
TCT குழுமம்
(C-9804)

# பவள விழாவும் தணி 75 நூல் வெளியீடும்



## அருளாசிச் செய்தி

கல்விசார் பெருந்தகையீர்களுக்கு,

தமிழினத்தின் அடையாளம் கல்வியாகும். இக்கல்விக்காக நீண்ட காலமாக பணியாற்றியவர்களுள் கலாநிதி திரு.நாகமுத்து தணிகாசலம்பிள்ளை அவர்களும் ஒருவர். இவர்கள் இன்று 75 ஆவது அகவை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இவர் அடக்கமும், அறிவும், பணியாற்றும் திறமையும், அனைவரையும் கவரும் பேச்சாற்றல், எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றித் தானும் மகிழ்ந்து மற்றவரையும் மகிழ்விக்கும் திறமை உடையவர். இன்றும் நல்ல பணிகளை ஆற்றி அவருடைய தேவை களையும் நிறைவு செய்து கொண்டு இருக்கின்ற இவர் கள் இன்று போல் என்றும் சுகதேகியாக இருக்க இறையருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீன குருமுதல்வர்.**



## ஆசிச் செய்தி

கல்விப்பணி கடவுட் பணி, எம் மண்ணில் கல்விச் சேவையாற்றிய கல்விமான் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை அவர்களின் பவளவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற்றவர். இவர் ஆசிரியப் பணி, அதிபர் பணி, கல்வி அதிகாரியாக உயர்ந்து மாகாண கல்வித் துறைகளில் உயர் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். பலரின் அபிமானத்தைப் பெற்ற பண்பாளர். இவரது பிள்ளைகள் எனது தாயாரிடம் கற்றவர்கள். என் தாயிடம் என்றும் நன்றி பாராட்டியதை யான் கண்டேன். பிறரை நிறைய வாழ்த்தும் பண்பு இவரிடமுள்ள உயர் சுபாவம் எனலாம்.

அகவை எழுபத்தைந்திலும் ஆன்மீக நாட்டத்துடன், நல்லூர்க்கந்தன் மஹோற்சவ காலத்தில் காலையும், மாலையும் தவறாது வீதி சுற்றி வழிபாடு செய்யும் இவரது சிறப்பைக் கண்டு யான் மகிழ்வேன். மாங்குளத்தில் இன்றும் பசுமைப்புரட்சி செய்யும் இவரது அயரா உழைப்பு, பிறருக்கு பாடமாக அமைவது நோக்கத்தக்கது. பவள விழாக் காணும் கல்விமானின் வாழ்வு சிறக்க துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன். சீரிய கல்வியாளருக்கு விழா எடுத்துச் சிறப்பிக்கும் அன்னாரின் அன்புக்குரிய நண்பர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைக் கூறி அமைகிறேன்.,

**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்,**
**தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை**
**தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை. தலைவர் - சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.**
**இளைப்பாறிய அதிபர் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்.**

## வாழ்த்துச் செய்தி



ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளரும் கல்வி அமைச்சின் முதுநிலை நிபுணத்துவ ஆலோசகராகவும் கடமையாற்றும் பவளவிழா நாயகன் கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை அவர்களின் பவள விழா மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.பவளவிழா நாயகன் திரு.நா. தணிகாசலம்பிள்ளை அவர்கள் நான் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றபோது எனக்கு ஆசானாக பாடம் சார்ந்த சமூகக் கல்வியினை மிக நயத்தோடு கற்பித்ததை இன்னும் நான் நினைவு கூருகின்றேன். அத்தோடு அவர் படிப்படியாக தன்னுடைய கல்விப்புல மேம்பாட்டினையடைந்த கல்வி நிர்வாக சேவையில் இணைந்து பணிப்பாளராக, நெருக்கடியான காலகட்டத்தில் வலயக் கல்வி அலுவலகத்திலும் மாகாணக் கல்வி அலுவலகத்திலும் பணியாற்றியமை சிறப்புக்குரியது.

மேலும் மாகாணத்திலிருந்து மத்திய அமைச்சினது இணைப்பாளராக இருந்து வன்னி மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இருக்கின்றபோது அங்கிருந்த மாணவர்களின் தொடர் கல்விக்காக இவர் ஆற்றிய சேவை பாராட்டுதற்குரியது.இவரது சிந்தனைத் தெளிவும் உயர்ந்த இலட்சியத் துடனான சுறுசுறுப்பான செயற்திறனும் போற்றப்படத்த க்கது. ஆசிரிய சேவையிலிருந்து கொண்டு தொடர்ந்து கல்வி கற்று கலாநிதி பட்டம் மற்றும் சட்டத்துறையிலும் தமது பட்டப்படிப்பினை முடித்திருந்தமை சாதனைக்குரியது. இன்னும் கல்வி சமூக,கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளில் சேவையாற்றும் ஆசானான பவளவிழா நாயகன் திரு.நா. தணிகாசலம்பிள்ளை அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து அடுத்த நூற்றாண்டு விழாவையும் காண எல்லாம்வல்ல இறைவனை பிராா்த்தித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

**இ.இளங்கோவன், ஆளுநரின் செயலாளர்**

மத்திய கல்வி அமைச்சின் ஓய்வு நிலை நிபுணத்துவ ஆலோசகர்

கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை அவர்களின்

## பவளவிழா




**கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை**

**இடம்:- "சபாலிங்கம் மண்டபம்"**

**யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்**

**காலம்:- (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்:- காலை 9.00 மணி**



## பேராயரின் ஆசிச்செய்தி

பல்துறை விற்பன்னர், கல்வியியல் மகாசமுத்திரம் நாகமுத்து தணிகாசலம் பிள்ளை அவர்களின் பவள விழாவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு செய்தி ஒன்றினை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.கலாநிதி தணிகாசலம்பிள்ளை கற்பதிலும் தனது ஆற்றலை உலகறியச் செய்துள்ளார். இவருடைய புலமையைக் கண்டே இவருக்கு நண்பனாயினோம். கல்வித் துறையில் இவர் நிலை நாட்டியுள்ள சாதனைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

இவருடைய கல்விப் புலமையினால் பல பதவிகள் அவரைத் தேடிவந்தன. 1992 ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள Bowling Green state University இல் நான் சில காலம் தங்கியிருந்தபொழுது அப்பல்கலைக்கழக நிர்வாகம் என்னை அவரின் அறைப் பங்காளியாக்கியது. அவருடன் ஒரு அறையில் தங்கியிருந்தமையால் பல விடயங்களை இந்த அறிஞர் மூலமாகத் தெரிந்து கொண்டேன்.

தமது பரந்த அறிவை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பேரின்பமடைபவர்.

பதினொரு நூல்களை எழுதி கல்வித்துறைக்கு மகத்தான பங்களிப்பைச் செய்துள்ளார். அவருடைய நூல்கள் கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு நல்விருந்து.

அவரின் சீரிய பணி தொடர இறைவன் அவருக்கு நல்ல ஆரோக்கியத்தையும் அமைதி நிறைந்த இல்லற வாழ்வையும் அருளுவாராக.

**அதி.வண.கலாநிதி. எஸ். ஜெபநேசன்,**
**முன்னாள் ஆயர்.**



## யாழ்.ஆயரின் ஆசிச்செய்தி

பவளவிழாக் காணும் கல்வியாளன், விழா நாயகன், அறிவுலகின் ஆழ முணர்ந்து கல்விப் பணியில் தன்னை இணைத்து, இன்று பவள விழாக காண்பது சாதாரண விடயமல்ல. ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளரும், கல்வி அமைச்சின் முதுநிலை நிபுணத்துவ ஆலோசகராகவும் கல்விப் பணியை தன் பணியாக்கி, பலரும் நல்லறிவு பெற்றிட உழைக்கும் இவர், இன்னும் பலரை எதிர்கால கல்வியாளர்களாக, கல்வியில் சிறந்த நிபுணத்துவம் உடையவர்களாக உருவாக்குவது உண்மையில் உயர்ந்த சிந்தனையேயாகும்.

அறியாமையில் இவ்வுலகம் மூழ்கிடாது, இப்பவள விழா நாயகன் மற்றும் இவர் போன்றவர்களது ஆழ்ந்த அனுபவமும், அறிவுத்திறனும், புதிய ஆளுமையுள்ள கல்விமான்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இன்னும் இவர் போன்ற உயர்ந்த கல்விமான்கள் உருவாக இறையாசீர் நல்கி வாழ்த்தி நிற்கின்றேன்.

**பேரருட் திரு.கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்,**
**யாழ் ஆயர்.**

## வாழ்த்துச்செய்தி

பொதுவில் எமது கல்விப்புலம் என்பது இரு சாரப்பட்டது. அதில் ஒன்று கற்பித்தல் சார்ந்தது. மற்றையது கல்வி நிர்வாகம் சார்ந்தது. பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகம் வரை கல்வித்துறை சார்ந்து விரிவுரையாற்றுவோர் கல்வி நிர்வாகத்தில் தங்களை ஈடுபடுத்துவதில்லை. மாறாக கல்வி நிர்வாகம் சார்ந்தவர்கள் கற்பித்தல் என்பதில் இருந்து விலக்குப் பெற்று விடுகின்றனர்.

அன்று முதல் இன்றுவரை ஏற்படுத்திய மிகச் சிறந்த கல்வியியலாளராக கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்களைக் கூறமுடியும். கல்வி நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்த போதிலும் கற்பித்தல் என்பதை அவர் கைவிடவில்லை. தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழகம் என்ற கல்விசார் நிறுவனங்களில் அவர் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

முதுகல்விமாணிப் பட்டத்தை மேற்கொள்பவர்கள் கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்கள் எழுதிய கல்வி முகாமைத்துவ நூல்களைத் தேடிக் கற்கின்றமை அவரின் பேராற்றலுக்குச் சான்றாதாரமாகும்.

ஆசிரியராக, கல்வி நிர்வாகியாக, கல்விப்புலத்தில் உயர் தகைமை பெற்ற கல்விச் சான்றோனாக, விரிவுரையாளராகப் பல பரிமாணங்களில் தன் அறிவாற்றலைப் பதிவு செய்த கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்கள் சமூக அக்கறை கொண்ட மனித நேயராகவும் இருப்பதால் இறைவன் அவருக்கு உயர் பெருமைகளைக் கொடுத்தான்.

இத்தகைய பெருமைமிகு கல்விச் சான்றோனின் பவளவிழா சிறப்புறவும் கல்விக்கான அவரின் வகிபங்கு தொடர்ந்தும் நம் இனத்திற்குக் கிடைக்கவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அவரை வாழ்த்துகின்றேன்.

**நல்லையா விஜயசுந்தரம்**
**பிரதம ஆசிரியர் ,**
**வலம்புரி நாளிதழ்.**

**அனைவரையும் இவ்விழாவில் பங்குபற்றுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**
**-பவள விழாக்குழுவினர்-**

# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
## தேர்த்திருவிழா சிறப்பு மலர்










# கேதாரகௌளி விரதாரம்பம் இன்று

ஏவிளம்பி வருஷ 2017 ஆம் ஆண்டிற்குரிய கேதார கௌளி விரதாரம்பம் புரட்டாதி 14ஆம் நாள் (30.09.2017) இன்று சனிக்கிழமை கோவில்களிலும் வீடுகளிலும் மிகவும் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்தப் பூஜையை மன அடக்க ஒடுக்கத்தோடு எந்த வர்ணத்தவராயினும் செய்யலாம்.

அதாவது புரட்டாதி மாதம் அஷ்டமித்திரி சுக்கில பட்சத்திலிருந்து இந்தப் பூஜையைத் தொடங்கி அமாவாசை வரை அனுஷ்டிக்க வேண்டும் என்கிறது ஸ்காந்தம். உலகிலே வசிக்கின்ற பெரும்பாலான இந்து மத மக்களால் இவ்விரதம் முறையாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

அம்பிகை உமாதேவியானவள் பரமேஸ்வரரை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டும். அவர் இடப்பாகத்தில் ஐக்கியம் பெற வேண்டும் என்பதற்காக திருக்கேதாரம் என்ற திருத்தலத்தை சென்றடைந்தார். அங்கு கௌதம முனிவரைச் சந்தித்து தன் வருகையைப் பற்றிக் கூற அவர் அப்போது அம்பிகை உமாதேவியாருக்கு சொல்லும் முகமாக நமக்கு உபதேசித்ததே கேதார கௌளி விரதமாகும்.



நன்றாக இழைத்து தயார் செய்யப்பட்ட 21 இழைகள் கொண்ட சரடை (நூலை) சங்கல்பத்தோடு (வேண்டுதல் நிறைவேற வேண்டும்) இடக் கையில் கட்டிக் கொள்ளல் வேண்டும். இந்த விரதத்தை கடைப்பிடிப்பவர் ஆண்களாக இருந்தால் 21 இழைகள் கொண்ட சரடை வலது கையில் கட்டிக் கொள்ளல் வேண்டும்.

புண்ணிய நதியில் கேணியில் ஸ்நானம் செய்து இயலுமானவரை சிவன்கோவில் சென்று வழிபடுவது உத்தமம். அங்கு செல்ல இயலாதவர்கள் அருகாமையில் உள்ள கோவில்களிலும் சென்று வழிபடலாம். சூரியன் மறைந்த பின் இரவில் மட்டும் ஒரு வேளைஉணவுஉண்ணவேண்டும். தூங்கும் போது கூட வேறு புலன் இல்லாமல் சிவனை நினைத்து சிவ சிந்தனையோடு தூங்க வேண் டும்.

இப்படி விரதமிருந்து தேய்பிறை சதுர்த்தசி அன்று கோயில் சென்று பூக்களால் அலங்காரம் செய்து கோயிலின் ஓர் குறித்த இடத்தில் ஒரு மரைக்கால் அளவு செந்நெல்லினை சதுரமாகப் பரப்பி அதன் நடுவே மந்திர பூர்வமாகப் பிரவை எழுத்தை எழுதி அதன் நடுவில் பூரண கும்பம் வைத்து கும்பத்தில் தர்ப்பையை முறைப்படி சாத்தி கும்பத்தில் சிவபெருமானை ஆவாஹணம் செய்ய வேண்டும். பின்பு பக்தியுடன் முறையாகப் பூஜை செய்து அம்பிகையின் துதிப்பாடல்களைப்பாடி வணங்க வேண்டும். பூஜையின் போது நெய்விளக்கு ஏற்றுவது சிறப்பு என்று சைவ சமய மரபு கூறுகின்றது. இப்படி அன்றைய தினம் பூஜை முடிந்த பின் மறுநாள் முன்னால் கையில் கட்டிக் கொண்ட சரடை (நூலை) அவிழ்த்து விட்டு பரமேஸ்வரனை வணங்க வேண்டும்.

கௌதம முனிவர் உபதேசித்த இந்த கேதார கௌளி விரதத்தை அம்பிகை உமாதேவியானவள் முறையாகக் கடைப்பிடித்து பரமேஸ்வரனின் இடப்பாகத்தைப் பெற்றார் என்கிறது வரலாறு. அத்துடன் தான் கடைப்பிடித்த இக் கேதார கௌளி விரதத்தை யார் கடைப்பிடித்தாலும் அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் கொடுத்து முடிவில் சிவனுடைய திருவடிப் பேற்றையும் அனுக்கிரகம் செய்ய வேண்டும் என்று பரமேஸ்வரனிடம் நம் மக்களுக்காக வேண்டிக் கொண்டார்.

அம்பிகை தேவியானவள் குழந்தைக்காக தாய் பத்தியம் இருப்பது போல நம் மக்களுக்காக அம்பிகை செய்து காட்டிய விரதம் இதுவாகும். பூஜை அன்று சாயங்காலமோ அல்லது மறுநாள் காலையிலோ தன்னால் ஆன இயன்ற நிவேதனம் செய்து, தூப, தீபம், கற்பூரம் காட்டி அஸ்மாத் பிம்பாத் ஸ்ரீகேதாஸ்வரம் யதாஸ்த்தானம் ப்ரதிஷ்டாபயாமி மோய புனராக மனாயச் என்று கூறி வடக்கு முகமாக கேதாஸ்ரேஸ்வரரை நகர்த்த வேண்டும்.

கௌளி பூஜையை விவாகம் ஆக வேண்டிய கன்னிகைகள் குத்துவிளக்கில் செய்ய வேண்டிய பூஜையை தவறாமல் பன்னிரண்டு தினங்களோ அல்லது 24 தினங்களோ அல்லது 45 தினங்களோ செய்தால் சிறந்த பலனை பெற்று விரும்பியதை பெறலாம். பூஜை செய்ய வேண் டிய இடத்தை சுத்தம் செய்து கோலமிட்டு குத்து விளக்கேற்றி குங்குமம், புஸ்பம், சந்தனம் இட்டு கிழக்கு முகமாக உட்கார்ந்து

சுக்லாம் பரதம் விஷ் ணும்
ஸஸிவர்ணம் சதுர்பு ஜம்
ப்ரஸன்ன வதனம் த்யோ
யேத்ஸ்ர்வவிக்னோபஸாந்தயே

என்ற மந்திரங்களை உச்சரித்து ஆரம்பிக்க வேண்டும். இந்த கேதாரகௌளி விரதத்தை இந்து மக்களாகிய நாம் மிகுந்த பக்தி சிரத்தையுடன் முறையாகக் கடைப்பிடித்து சகல செல்வங்களையும் சகல சௌபாக்கியங்களை யும் பெற பரமேஸ்வரனின் திருப் பாதங்களைப் பணிந்து இந்த மண்ணிலே அவதரித்த மானிடர்கள் அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ சிவனைப் பிரார்த்திப்போமாக!

கலைமாமணி
திருமதி-மலர்விழி கனகசபை
உதவிக் கல்விப்பணிப்பாளர்(அழகியல்)
தீவக கல்வி வலயம், வேலணை

# மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களில் அமைச்சர்கள் பங்கேற்க வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி உத்தரவு



2018 ஜனவரி முதல் அனைத்து அமைச்சர்களும் தத்தமது மாவட்டங்களில் நடைபெறும் மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களில் பங்குபற்ற வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தமது அமைச்சுக்களினால் குறித்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக பிரதேச அரசியல் தலைவர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டும் என்று தேசிய பொருளாதார சபை இரண்டாவது முறையாக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான மங்கள சமரவீர, றிசாத் பதியுதீன், ஜனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அரசாங்க அதிகாரிகள் பங்குபற்றினர். (இ-3)

# வடமாகாண மீன்வளம் இன்று விசேட உரை

யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் "வடமாகாண மீன் வளமும் பயன்பாடும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்" எனும் தலைப்பிலான விசேட உரை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொதுசன நூலக குவிமாடச் சிறிய கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இதில் பேராசிரியர் சூசை ஆனந்தன் உரை நிகழ்த்துவார். (இ-3-51)

# இன்று ஆயுத பூஜை

ஒரு மனிதனுக்கு உடல் வலிமை, பராக்கிரமம், மனோ திடம், புத்திபலம், தீர்க்காயுள், ஞானம், தேவைகளிற்கு பணம் போன்ற அனைத்து அம்சமும் நிறைந்திருந்தால் தான் அவன் சிறந்த வெற்றியாளனாக திகழ முடியும்.

அதாவது வீரம், செல்வம், கல்வி ஆகியவை அனைத்தும் நிறைந்திருக்க வேண்டும். இவற்றை பெறுவதற்காகவே நவராத்திரி விரதம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. வாழ்க்கையின் எல்லாத் தேவைகளையும் அடைய பணம் வேண்டும்.

இதற்காக மகாலட்சுமி தேவியை வணங்குகிறோம். பெற்ற பணத்தை பாதுகாக்க வீரம் வேண்டும். அதற்காக துர்க்காதேவியை வழிபடுகிறோம். பெற்ற பாதுகாக்கப்பட்ட பணத்தை நல்ல வழியில் பயனுள்ள காரியங்களிற்கு பயன்படுத்த அறிவு அதாவது கல்வியறிவு வேண்டும். அதற்கு சரஸ்வதியை வணங்குகிறோம்.

இப்படியாக காரண காரியங்களுடன் இந்த விரத முறை அமைந்துள்ளது.

நவ என்ற சொல்லிற்கு ஒன்பது, புதியது என்ற இரண்டு அர்த்தங்கள் உள்ளன. இங்கு ஒன்பது ராத்திகள் என்பதே நவராத்திரி எனப்படுகிறது. ஒன்பது ராத்திரிகள் சக்தியை நோன்பு நோற்று



வழிபட்டு 10 ஆம் நாள் நோன்பை நிறைவு செய்வது நவராத்திரி எனப்படுகிறது.

இந்த ஒன்பது நாட்களும் முப்பெரும் தேவியரான மலைமகள் (துர்க்கை), அலைகள் (மகாலட்சுமி), கலைமகள் (சரஸ்வதி) ஆகியோருக்கு மும்மூன்று நாட்களாக வழிபடும் ஒரு முறையும் உள்ளது. மற் றும் ஒன்பது சக்தியினை ஒன்பது நாட்களாக வழிபடும் ஒரு முறையும் உள்ளது.

பண்டைய காலத்தில் மன்னர்கள் மற்றும் படை வீரர்கள் ஒன்பது நாட்களும் தங்கள் ஆயுதங்களை (போர்க் கருவிகளை) பூஜையில் வைத்து பத்தாம் நாள் விஜய தசமியன்று விழா எடுத்து தமது வெற்றிக்கு தமது ஆயுதங்களிற்கு சிறப்பு சக்தி கிடைக்க வேண்டும் என வழிபட்டு வந்தனர். இதற்கு சான்று கிருஷ்ண அவதாரத்தில் கம்சனின் படலத்தில் காணப்படுகிறது.

நவராத்திரி கொலு வைக்கும் முறையையும் நவராத்திரி என்பது பெண்கள் தெய்வங்களிற்கு மட்டுமே கடைப்பிடிக்கும் ஒரு விரத வழிபாட்டு முறை போலவும் அது பெண்கள் மட்டுமே கடைப்பிடிக்கும் ஒரு விரத வழிபாட்டு முறை போலவும் ஒரு தவறான தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த நவராத்திரி விரதம் குறிப்பாக வெற்றிக்கனியை பறிக்க விரும்பும் ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய விரதமாகும். விஜயதசமி அன்று பிள்ளைகளிற்கு ஏடு தொடக்கல் என்ற கல்வியின் ஆரம்ப நாளாக கடைப்பிடிப்பதையும் நாம் காணலாம்.

### நவராத்திரி கொலு

நவராத்திரியின் சிறப்பு அம்சம் கொலு வைப்பதேயாகும். கொலு என்பது பல படிகளைக் கொண்ட மேடையில் பலவித பொம்மைகளை நேர்த்தியாக அலங்கரித்து வைப்பதேயாகும். ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணினால் செய்யப்பட்ட பொம்மைகளை சக்தியின் அம்சமாக எண்ணி நவராத்திரி பூசிப்பவர்களிற்கு சகல நலங்களையும் தருவேன் என்று அம்பிகையே கூறியிருக்கின்றார்.

கொலு மேடை 9 படிகளை கொண் டதாக இருக்க வேண்டும்.

நவராத்திரி நாளான ஒன்பது இரவுகள் தனி சக்தியாக விளங்கும் ஜனக் மாதா பத்தாம் நாளன்று ஈஸ்வரனை வுண்ங்கி ஹசி சக்தியாக, ஐக்கிய ரூபினியாக- அர்த்தநாரீசுவரராக மாறுகிறாள் என்பதே இந்த பண்டிகையின் புராண வரலாறு.

### வழிபாடு

ஒன்பது நாட்களிலும் தேவி பாகவத பாராயணம் செய்யலாம். சுமங்கலிகளையும் கன்னிப் பெண்களையும் இல்லத்திற்கு வரவழைத்து அவர்களை தேவியாகவே கருதி தாம் பூலம், பழங்கள், வஸ்திரங்கள், வீட்டு உபயோகத்திற்குத் தேவையான பொருட்களை அவரவர் வசதிக்கேற்ப அளித்து மகிழலாம்.

அம்பிகையை சக்தி சொரூபத்தை நினைத்து தியானிப்பதால் சகல பாவங்களும் நிவர்த்தியாகும் என்பது திண்ணம்.

அராலியூர்.க[illegible]
[illegible].சரவ[illegible]

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 7.6 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்ற வேண்டியுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட 7.6 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்ற வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வை துரிதப்படுத்தும் வகையில் பல்வேறு இடங்களிலும் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி. கண்டாவளை, பச்சிலைப்பள்ளி. பூநகரி ஆகிய பகுதிகளில் தற்போது வெடிபொருள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 7.6 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் வெடிபொருள் அகற்ற வேண்டியிருப்பதாகவும் அதாவது பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கிளாலி, முகமாலை, இத்தாவில் ஆகிய பகுதிகளிலும் 7.6 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்ற வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 579 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டு இதுவரை அகற்றப்பட்டுள்ளதாகவும் 7.6 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணி வெடிகள் அகற்ற வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (2-315)




# போதியளவு பேருந்துகள் இன்மையால் உரிய சேவைகளை வழங்குவதில் இடர்பாடு

## முல்லைத்தீவு சாலை நிர்வாகத்தினர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களுக்கு போதிய சேவைகளை வழங்கக் கூடிய வகையில் இலங்கை போக்குவரத்துச்சேவை பேருந்துகள் இல்லையெனவும் இதனால் உரிய சேவைகளை வழங்குவதில் இடர்பாடுகள் காணப்படுவதாக முல்லைத்தீவு சாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் எவையும் இடம் பெறுவதில்லை எனவும் இதனால் பின்தங்கிய பிரதேச மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு வினவியபோது, கடந்த 1990ஆம் ஆண்டு முல்லைத்தீவு சாலை யுத்தம் காரணமாக செயலிழந்து மீண்டும் 19 வருடங்களின் பின்னர் கடந்த 2009 ஆம்ஆண்டு மீள இயங்க ஆரம்பித்தது.

ஆனால் ஆரம்பத்தில் இருந்த அடிப்படை வசதிகள் கூட தற்போது இல்லாத நிலை காணப்படுகின்றது.

அதாவது 1990ஆம்ஆண்டு 33 பேருந்துகள் சேவைகளில் ஈடுபட்டன. தற்போது குறைந்தளவு பேருந்துகளே சேவையில் ஈடுபடக் கூடிய நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன்போதிய ஆளணி மற்றும் போதிய அடிப்படை வசதிகள் இன்றியும் காணப்படுகின்றது. இவ்வாறு வசதிகள் இன்மையால் போதியளவு பேருந்து சேவைகளை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது என முல்லைத்தீவு சாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (2-315)

# அடிப்படைத் தேவைகள் முதல் அரசியல் பிரச்சினைகள் வரை மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகள் முதல் அரசியல் பிரச்சினைகள் வரை ஏமாற்றப்பட்டு விட்டனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி உதயநகர் கிராமத்தில் அண்மையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகள் முதல் அரசியல் பிரச்சினைகள் வரை ஏமாற்றப்பட்டுவிட்டனர். தேர்தல் காலங்களில் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு முற்றிலும் முரணான நிலையில் செயற்பாடுகள் சென்று கொண்டிருக்கின்றன. பெரும்பாலான தமிழ் மக்களின் வாக்குகள் எதற்காக வழங்கப்பட்டதோ அதற்கு மாறாக வாக்குகளை பெற்றுக்கொண்டவர்கள் நடந்துகொண்டுள்ளனர்.

தொடர்ந்தும் மக்கள் இவ்வாறு ஏமாற்றப்பட முடியாது, மக்களின் அடிப்படை தேவைகள் முதல் அரசியலுரிமை வரை வெளிப்படைத் தன்மையுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த மக்கள் சந்திப்பு நிகழ்வில் உதயநகர் கிராமத்தைச் சேர்ந்த தணிகாசலம், சிவநேசன் மணியம் உள்ளிட்ட பெருமளவான இளைஞர்களும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# கிராம பெண்கள் இணைந்து கிராம அலுவலருக்கு கடிதம்

புதுக்குடியிருப்பு மருதமடு பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு எதிராக பெண்கள் இணைந்து கிராம அலுவலருக்கு கையொப்பமிட்டு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு மருதமடு கிராமத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்லும் சட்டவிரோத மதுபாவனையினால் பெண்கள், சிறுவர்கள் ஆகியோரின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. மதுபிரியர்களின் அதிகரித்த நடமாட்டம் இந்த பகுதிக்குள் இடம்பெற்று வருவதால் பெண்கள் சுதந்திரமாக தெருவில் நடமாட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையைக் கருத்தில் கொண்ட கிராம பெண்கள் குறித்த பகுதியில் சட்ட விரோத மது பாவனையை கட்டுப்படுத்துமாறு நேற்று முன்தினம் கிராம அலுவலருக்கு கையொப்பம் இட்டு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்கள்.

அத்துடன் இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று கிராமத்தில் நடைபெற்றுள்ளது. இதன்போது நேரடியாகவும் எழுத்து மூலமும் கிராமத்தின் சட்டவிரோத மது பாவனை தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (2-310)

# தகவல் வழங்கப்படவில்லை நிர்வாகத் தெரிவு இடைநிறுத்தம்

வவுனியா வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு இடைநடுவில் கைவிடப்பட்டது.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகத்தெரிவு தலைவர் த.செல்வராஜா தலைமையில் புதிய நிர்வாகத் தெரிவுக்கான கூட்டம் கடந்த 27 ஆம் திகதி 10.30 மணியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில் அங்கத்தவர்களுக்கு 14 நாட்களுக்கு முன்பதாக எழுத்து மூல அறிவித்தல் அனுப்பப்பட்ட போதிலும் தலைவரினால் உரிய முறைப்படி வவுனியா மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு தெரியப்படுத்தாத காரணத்தினால் இக்கூட்டத்திற்கு அவர்களினால் சமுகம் அளிக்க முடியாது போயுள்ளதா தெரிவிக்கப்பட்டது.

அந்த வகையில் இது தொடர்பாக வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சிடம் தொடர்பு கொண்டு வினவிய போது துரித கதியில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (2)

# கொல்லவிளாங்குளத்தில் வீசியது சுழல் காற்று

## மரங்கள் சாய்ந்து போக்குவரத்தும் தடைப்பட்டது



மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கொல்லவிளாங்குளத்தில் நேற்று முன்தினம் வீசிய சுழல் காற்றினால் மரங்கள், மின்கம்பங்கள் என்பன முறிந்து வீதிகளுக்கு குறுக்காக காணப்பட்டதை அடுத்து போக்குவரத்து தடைப்பட்டது. இதேவேளை மின்வயர்கள் அறுந்த நிலையில் காணப்பட்டதையடுத்து மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் அச்சம் அடைந்தனர். இதனால் போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது . (2-281)

# டெங்கு விழிப்புணர்வு செயற்பாடு



முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் டெங்கு தொடர்பிலான விழிப்புணர்வு செயற்பாடு நாளாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

விழிப்புணர்வு செயற்பாட்டை சுகாதாரப் பரிசோதகர், இராணுவத்தினர், பொலிஸார், சுகாதாரத் திணைக்களத்தினர் கூட்டாக இணைந்து வீட்டுத்தரிசிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை வீட்டு வளாகத்தினுள் காணப்படும் சிரட்டைகள், கோம்பைகள், போத்தல்கள் ஆகியவற்றைவீட்டுத்தரிசிப்பின் போது அகற்றி வருகின்றனர். டெங்கு பரவும் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றனர். (2-310)

# காட்டு யானைகளின் அட்டகாசம் கல்மடு நகரில் அதிகரிப்பு

## நாளாந்தம் பயிர்கள் நாசம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்மடுநகர்ப் பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதுடன் குடியிருப்புக் காணியில் பயன்தரு மரங்களையும் அழித்து வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கல்மடு நகர், நாவல்நகர், றங்கன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் கடந்த சில நாட்களாக யானையின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இரவுவேளைகளில்யானைத் தாக்கத்திலிருந்து பயிர் களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் காவலுக்குச் சென்ற விவசாயிகளும் உயிராபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேவேளை குடிமனைக்குள் புகும் யானைகள் தென்னை மரங்களையும் ஏனைய பயிர்களையும் அழித்து வருகின்றன.

எனவே இந்தப்பகுதிகளில் யானைத்தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் வகையில் பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறும் விவசாயிகள், பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# கெங்காதரன் குடியிருப்பிலுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு உதவுங்கள்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

கிளிநொச்சி கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் என பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அக்கராயனிலுள்ள கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் தற்போது 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறித்த பகுதியில் தலா அரை ஏக்கர் காணிகளில் இந்தமக்கள் வாழ்ந்து வருவதனால் அக் காணிகளில் எந்தவித வாழ்வாதார பயிர்ச் செய்கைகளையோ அல்லது ஏனைய வாழ்வாதார செயற்பாடுகளையோ முன்னெடுக்க முடியாது.

அன்றாட உணவிற்கே பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு தொழில் வாய்ப்புக்களையோ அல்லது வேறு பயிர்ச் செய்கை காணிகளையோ பெற்றுத்தருமாறு இப்பகுதி மக்கள், பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (2-315)



கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்பப் பீடத்தை நேற்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். மத்திய கல்வி அமைச்சின் நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பப் பீடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், பாடசாலை அதிபர் இரவீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

# வவுனியாவில் கஞ்சாவுடன் பொலிஸ் உத்தியோகத்தர் கைது

வவுனியா இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து நிலையத்தில் கஞ்சாவுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வவுனியா போதை ஒழிப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

குருநாகல், கல்கமுவ பொலிஸ் நிலையத்தில் பணியாற்றுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கிளிநொச்சியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு கஞ்சாவை பேருந்தில் எடுத்துச் செல்ல முற்பட்ட வேளை வவுனியாவில் உள்ள இலங்கை போக்குவரத்து சபை பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் இருந்து 2 கிலோ நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரே குறித்த பொலிஸ் உத்தியோகத்தரைக் கைது செய்தனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தமுத்தேகம பகுதியைச் சேர்ந்தவர் எனவும் விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் . ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

# 918 வேலைத்திட்டங்களுக்கு 513 மில்.ரூபா நிதி கிடைப்பு

## முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் தகவல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட 918 வேலைத்திட்டங்களுக்கு சுமார் 513.13 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அதனூடாக அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்திற்கு பின்னரான மீள்குடியமர்வையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடாக பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு சுமார் 513.13 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அதனூடாக 918 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடாக 10 குளங்களைப்புனரமைப்பதற்கு 45 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்று அதனூடாக 10 குளங்களின் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விவசாய அமைச்சினூடாக 126 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றது. இதனூடாக 36 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையம் திருத்துவதற்கு நான்கு மில்லியன் ரூபாவும் ஒலுமடு கமநல சேவை நிலையம் திருத்துவதற்கு 0.3 மில்லியன் ரூபாவும் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் திருத்த வேலைகளுக்கு 0.1 மில்லியன் ரூபாவும் கிடைக்கப்பெற்றன.

அத்துடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினூடாக இரண்டு வேலைத்திட்டங்களுக்கு 8.33 மில்லியன் ரூபாவும் 18 விவசாய கிணறுகளை அமைப்பதற்கு 4.83 மில்லியன் ரூபாவும் மீள்குடியேற்ற அமைச்சினூடாக 800 வேலைத்திட்டங்களுக்கு 80 மில்லியன் ரூபாவும் இதனைவிட உரமானியக் கொடுப்பனவுகள், உழவு இயந்திர கொட்டகைகள் அமைத்தல் உள்ளிட்ட சுமார் 918 வேலைத் திட்டங்களுக்குரிய நிதியாக 513.13 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-315)

# தமிழ் பேசும் பொலிஸார் இன்மையால் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் சிரமம்

## பொதுமக்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் போதியளவு தமிழ் பேசும் பொலிஸார் இல்லாத நிலையில் உரிய நேரங்களில் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் போதிய தமிழ் பேசும் பொலிஸார் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் பொலிஸ் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு செல்லுகின்ற பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பல்வேறு முறைப்பாடுகளை செய்யும் பொருட்டு பொலிஸ் நிலையத்திற்கு செல்லும் பொதுமக்கள் நீண்டநேரம் காவல் நின்றே தம்து முறைப்பாடுகளைப் பதிவு செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதனைவிட இரவுவேளைகளிலும் பகல் வேளைகளிலும் அவசர தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு நிலைய தொலை பேசிகளுக்கு தகவல்களை வழங்க முயற்சிக்கும் போது அங்கு தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழி தெரிந்த பொலிஸார் எவரும் கடமையில் இருப்பதில்லை என்றும் சிங்கள மொழி தெரிந்த பொலிஸார் மட்டுமே கடமையில் இருப்பதுடன் தமிழ் தெரிந்த பொலிஸாரிடம் பேசுவதற்கு கேட்கும் போது தொலைபேசி அழைப்பைத் துண்டித்து விட்டு செல்கின்றனர்.

இதனால் அவசர முறைப்பாடுகள் அல்லது குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களை உடனடியாக வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது என குற்றம் சாட்டியுள்ள பொதுமக்கள் இலகுவாக சேவைகளைப் பெறக்கூடிய வகையில் போதிய தமிழ்பொலிஸார் நியமிக்கப்படவேண்டும் என பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)




# இறங்குதுறையை ஆழமாக்குங்கள் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி இரணைமாதா நகர் இறங்குதுறையை 'ஆழமாக்கி புனரமைத்துத்தருமாறு இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி இரணைமாதா நகர் கடற் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் கடற்றொழிலாளர்கள் தமது கடற்றொழில் படகுகளை கரைக்கு கொண்டு வருவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள இறங்குதுறை இதுவரை புனரமைக்கப்படாதுள்ளது.

எனவே இதனை ஆழமாக்கி புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# பாண்ட் வாத்திய கருவிகள் அமைச்சரினால் வழங்கல்



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசனினால் பாண்ட் வாத்திய கருவிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசனின் இவ்வாண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து பாண்ட் வாத்திய இசைக கருவிகள் பாடசாலையில் நேற்று இடம் பெற்ற வாணி விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விவசாய அமைச்சர் பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்தார். (2-281)

## சங்கிலி அறுப்பு சம்பவத்துடன் தொடர்புபட்ட

# முன்னாள் இராணுவ வீரர் உட்பட மூவர் வவுனியாவில் கைதாகினர்

வவுனியாவில் வீதியில் பயணித்தவர்களிடம் சங்கிலி அறுத்த சம்பவம் உள்ளிட்ட பல்வேறு திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடைய முன்னாள் இராணுவ வீரர் உள்ளிட்ட மூவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா நகரில் வீதியில் செல்பவர்களிடம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்றமை, நகைகள் திருடப்பட்டமை என பல்வேறு முறைப்பாடுகள் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றது. இதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகிந்தவின் வழிகாட்டலில் பொலிஸ் உத்தியோகத்தர் நிஜாமின் தலைமையிலான குழுவினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர்.

இதன்போது வவுனியாவில் வைத்து 20, 21, 25 ஆகிய வயதுகளை உடைய அநுராபுரம், நீராவி, சாலபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர் உட்பட மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் தாங்கள் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(2-250)

# மாணவர்களுக்கு சான்றிதழ்

கிளிநொச்சி கிராஞ்சியில் கணனி பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

லண்டன் அகிலன் பவுண்டேசன் ஸ்தாபகரின் அனுசரனையுடன் நடத்தப்படும் சிறி கற்பகவிநாயகம் கணனி கல்வி நிலையத்தினூடாக இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வரும் கணனி கல்வித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி கிராஞ்சி அ.த.க.பாடசாலையில் கணனி கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது. (2-315)

# தமிழ் அரசியல் கைதிகளை அரசு விடுவிக்க வேண்டும்

## த.தே.ம.முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 25 ஆம் திகதியில் இருந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடைய உடல் நிலை தற்போது மோசமடைந்துள்ளது. ஆகவே அவர்களை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் வித்தியா கொலை வழக்கில் துணிச்சலான நல்லதொரு தீர்ப்பினை வழங்கிய ரயல் அட்பார் மன்றின் நீதிபதிகள் பாராட்டுக்குரியவர்கள் எனவும் தெரிவித்த அவர், வித்தியா கொலை வழக்கின் போது யாழ். நீதிமன்ற கட்ட தொகுதி இளைஞர்களால் தாக்கப்பட்டதற்கு முழு பொறுப்பும் பொலிஸாருடையதே. ஆகவே அவர்களுடைய வழக்குக்களை தள்ளுபடி செய்வது சமூகத்தில் நடைபெறும் அநீதிகளுக்கு எதிராக அகிம்சை வழியில் இளைஞர்கள் போராடுவதை வரவேற்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வித்தியா கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப் பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அனைவரையும் கோபத்திற்கு ளாக்கியது. இதனால் கொலைக்கு நீதி கோரி பல போராட்டங்களும் நடை பெற்றன. குறித்த கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சுவிஸ் குமாரை பொலிஸார் விடுவித்திருந்தனர். இதனை தீர்ப்பு வழங்கிய நீதிபதியும் சுட்டிக்காட்டியிருந்தார்.

சுவிஸ்குமாரை விடுவித்ததால் ஆத்திரமடைந்த இளைஞர்கள் நீதிமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது நீதிமன்றம் மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. நீதிமன்றம் மீதான தாக்குதல் சட்டத்திற்கு முரணானது. ஆனாலும் அத் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் பொலிஸாரே. இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட போதும், அவர்களின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 25 ஆம்திகதியில் இருந்து உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடைய உடல் நிலை தற்போது மோசமடைந்துள்ளது.

அவர்களை உடனடியாக விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்த அவர், அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி முற்றாக நிராகரிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார். (இ-4)

# ரோஹிஞ்யா முஸ்லிம் அகதிகள் மீது தாக்குதல் வட மாகாண சபையில் சிவாஜிலிங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கல்கிஸைப் பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த மியன்மார் ரோஹிஞ்யா முஸ்லிம் அகதிகள் மீது பௌத்த தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கண்டித்துள்ளார்.




வடக்கு மாகாண சபையின் 106 ஆவது அமர்வு நேற்று முன்தினம் அவைத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்வில் சிறப்பு விடயமாக ரோஹிஞ்யா அகதிகள் விவகாரத்தை சபையில் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கொண்டு வந்து கருத்துக்களை தெரிவிக்கும் போதே இவ்வாறு கண்டித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது. காங்கேசன்துறை கடற்பரப்பில் தத்தளித்துக்கொண்டிருந்த மியன்மார் அகதிகள் சிலரை இலங்கை கடற்படையினர் கைது செய்திருந்தனர். பின்னர் அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் ஊடாக கல்கிஸையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அங்கு சென்ற சில பௌத்த தீவிரவாதிகள் அந்த முஸ்லிம் மக்களை தாக்கியுள்ளதுடன் அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறும் அட்டகாசம் செய்துள்ளனர்.

பௌத்த தீவிரவாதிகளின் இந்த கொடூரமான செயலை வடக்கு மாகாண சபை கண்டிக்கின்றது என்றார். இதன் போது ஒரு சில பௌத்த பேரினவாதிகள் இவ்வாறு நடந்துகொண்டமையை வைத்து அனைவரையும் குறையாக சொல்ல வேண்டாம் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக கூறினார். மேலும் குறித்த மியன்மார் அகதிகளை வடக்கிற்கு அனுப்பி வைத்தால் அவர்களுக்கு உதவுவதற்கு தாம் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-4)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்<br>தொ.இ: B/7132 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: வங்கியாளர்<br>தொ.இ: G/7124 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: BSc/ அமெரிக்கா<br>தொ.இ: B/7133 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>தகைமை/தொழில்:BA/முன்பள்ளி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7126 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7134 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 64<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ தனியார் தொழில்<br>தொ.இ: G/7131 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/7136 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bio medical Eng<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7135 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# இராசி பலன்

30.09.2017
(புரட்டாதி 14, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
தசமி முன்னிரவு 11.57 மணிவரை
உத்தராடம் மாலை 5.39 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
கேதாரகௌரி விரதாரம்பம்
விஜயதசமி

வளவன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
திருவாதிரை, பூனர்பூசம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | ராகு |
| சந் கேது | | | செவ், சுக் |
| | சனி | குரு | சூரி, புத |

**மேடம்:** செவ் குளிரும் செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலம் சீராகும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்:** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், பாராட்டும் புகழும் கூடும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆன்மீக நாட்டம் கூடும்.

**மகரம்:** வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் செல்லும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

# அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

## நியூ நெல்சன் லேணர்ஸ்

## New Nelson Learners

89, Kandy Road,
Chundukuli,
Jaffna.

T.P : 021 222 4527,
077 358 1916,
077 790 6064
Fax : 021 222 9109

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிசூடிய பயிற்சி நேரங்கள். அதிசூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.





### கிளைகள்

இல.89, கண்டி வீதி,
சுண்டுக்குளி.
021 222 4527
077 358 1916

பஸ் நிலையம்,
சுன்னாகம்.
077 715 0097
021 492 3732

பிரதான வீதி,
வல்வெட்டித்துறை.
077 557 3711
021 492 3733

காளிகோயில் வீதி,
சாவகச்சேரி.
021 492 3114
077 761 1686

குறிகட்டுவான் வீதி,
வங்களாவடி,
வேலணை
077 730 6980
071 454 6940

இல.127, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
021 492 3115
077 111 3382





# த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

அனைத்து விதமான சாறி வகைகள், பஞ்சாபிகள், குர்தாக்கள், சேட் வகைகள், இன்னும் சிறுவர், சிறுமிகளுக்கான ஆடை வகைகள் என அனைவருக்கும் ஏற்ற சகல விதமான ஆடைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்.



## T.SANGARAPPILLAI & SONS



21, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

TP : 021 222 9965
MOB : 077 308 6894

கிளை:
பிரமாண்டமான காட்சியறை,
225C ஆஸ்பத்திரி பின்பக்கம்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Email :
sangarappillaiandsons@gmail.com



NORTH LANKA IIT
SUCCESS MAKES PERFECT

# NORTH LANKA IIT

## இலங்கையின் தலைசிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனம்

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

### B.Sc in Computer Science
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: O/L or A/L

### B.Sc in Compter Science(Top Up)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: 2 Years Diploma / HND

### M.Sc. in Computer Science
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: Any Degree

### Bachelor of Education (B.Ed.)
✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: A/L

### Bachelor of Education (B.Ed.) (Top Up)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 2 Years Entry Qualification: 2 Year Diploma Training College / College of Education

### B.Sc. in Civil Engineering (Top Up)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: 2 Years Diploma / HND

### Master of Public Administration (MPA)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

### Bachelor of Business Administration(BBA)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: A/L

### Master of Education (M.Ed.)
✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
✓ வடமாகாணக் கல்வியமைச்சின் அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: B.Ed. / P.G.D in Edu

### B.Sc in Physical Education And Sports
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year
Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

### Master of Business Administration (MBA)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

### Bachelor of Business Management (BBM)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: A/L

### Bachelor of Business Administration (Top Up)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: HNDA

முழு விவரங்களை பெற கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்
North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna.
Ph:0767504535 / 0214927088

# மு.விக்னேஸ்வரன் அவர்களின்



### கோவையாதீன குரு முதல்வரின் ஆசிச்செய்தி

விழா நாயகன் என் அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரியவர். எனது சக பாடி பாடசாலையில் கடமையைத் தொடங்கி மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நிறைவு செய்தவர். சிறந்த சமூக சேவையாளர். இவருடைய ஓய்வுக்காலம் சிறப்புற கண்ணகிஅம்பாளைபிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**சிவஸ்ரீ வை.மு.பரம– சண்முகராஜ சிவாச்சாரியார்**
**பவானை கண்ணகியம்மன் தேவஸ்தானம், கோப்பாய்.**



### விக்கி ஆளுமையின் குறிகாட்டி

கல்விப்பணி, கருணைப்பணி இதனைச் சரிவரச் செய்து பலரது பாராட்டையும் பெற்றவர் மு.விக்னேஸ்வரன். கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஆசிரியராக, அதிபராக தன் ஆற்றல் மிகு சேவையினை சமூகத்துக்கு ஈர்ந்தவர். நல்லாசிரியர், நல்லதிபர் என்பதற்கு சிலர் எடுத்துக் காட்டு, சிலரின் பட்டறிவு தினசரி வாராந்தப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் கல்விக்கா்ன வெளியீடுகள் ஊடாக மாணவர்கட்கு வளமூட்டிய விக்கியின் ஆளுமை, ஆற்றல் மிகு தலைமைத்துவம், நேர் மனப்பாங்கு, மனத்தூய்மை என்பன அவரின் பணிக்கு சிறப்பாக அமைந்தன. எளிமை, அர்ப்பணிப்பு, நேரம் தவறாமை, நன்றியுணர்வு, பிறருக் குதவுதல் என்பன அவரின் அணிகலன்கள். அவரின் ஓய்வுகாலம் சிறப்புற இறைவன் துணை நிற்பாராக.

**யோ.ரவீந்திரன், பிரதிக் கல்வியாளர்,**
**வடமாகாணம் கல்வித் திணைக்களம்.**



### கோப்பாயின் தலைமகன் அதிபர் விக்னேஸ்வரன்

இன்றைய தினம் மணிவிழா காணும் எனது அருமை நண்பர் உரும்பிராய் சைவத் தமிழ் அதிபர் விக்கி அவர்கள் தன் சேவையாலும் பண்பாலும் கல் வித் தகைமையாலும் உயர்ந்து விள ங்கிய ஒரு நல்ல மனிதர். மரியாதைக்குரிய அதிபர் முத்துசாமி அவர்களுடன் ஆசிரியர் இராசம்மா அவர்களும் கல்விச் சமூ கத்துக்கு ஆற்றிய அளப்பரிய சேவை மகன் விக்கியில் மிளிர்ந் ததை அனைவரும் அறிவர். நீண்ட காலம் கோப்பாய்க் கோட்ட அதிபர்களின் வழிகாட்டியாக திகழ்ந்த ஒரு புகழ் பூத்த அதிபர் என்றால் மிகையாகாது. மரியாதை மாறாத வார்த்தைகள், புன்சிரிப்பு, நேர்மை, அனை வரையும் நம்பி நடக்கும் இயல்பு இவை அவரது இரத்தத்துடன் கலந்த இயல்பு. நிர்வாகத்திறனும் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்களை அவரவர்களுக்கு ஏற்றாற்போல் கையாளும் திறனும் கொண்டவர். உதாரணமாக அதிபராகத் திகழ்ந்தவர். இவரது காலத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவர் தொகையில் உயர்ந்த வரலாறு அனைவரையும் ஒரு கணம் திரும்பிப் பார்க்க வைத்த வரலாறு மறக்க முடியாதது. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத் தாய் நூற்றாண்டு விழாக் கண்டு பெருமை பெற்றது என்றால் விக்கி யின் முயற்சி என்றால் யாரும் மறக்க முடி யாதது. நூற்றாண்டு விழா மண்டபம் அவரது முயற்சிக்கும் திறமையான நிர்வாக த்திற்கும் கல்விப்புலம் வழங்கிய பரிசாகும்.

இந்திரவிழாவாக உரும்பிராய் சைவத்தமிழ் நூற்றாண்டு விழா நடந்தது கண்டு மனம் புளுங்கியவர்களும் தோண்டிப்புதைக்க எண்ணியவர்களின் உத்தியிலும் விக்கி எழுந்து மிடுக்குடன் நின்று சேவை செய்தது எவராலும் இலகுவில் செய்து விட முடியாததாகும். உண்மையான ஒரு சேவையாளன், பண்பாளன், துணிச்சல் மிக்க நிர்வாகி, வயதால் ஓய்வு பெறுவது தடுக்க முடியாதாயினும் கல்வி உலகம் ஒருபோதும் அவரது சேவையை மறக்காது என்பது உண்மையாகும்.

**திரு.சி.மாணிக்கராசா,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**



### பதவியில் உறுதியானவர்

கோப்பாய்க்கோட்ட அதிபர் சங்கத்தின் செயலாளராய், தலைவராய், பரீட்சைக் குழு உறுப்பினராய் பதவி வகித்தவர் எங்கள் விக்கி. எல்லாப் பணிகளிலும் உறுதி, எதையும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் செய்ய வேண்டுமென்பதில் மிகுந்த ஆர்வம், எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டுமென்ற விருப்பு, எதையும் தர்க்கித்து சரியாகச் செய்வதில் மிகுந்த ஆர்வம். இது இவரது ஆளுமை. மூவின மக்களும் செறிந்து வாழும் இரத்தினபுரி மாவட்டத்தில் இளமைக் கல்வியையும் தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொண்டமை மும்மொழியையும் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பினை வழங்கியது. ஓய்வுக்காலம் வளமாகவும் சிறப்பாகவும் அமைய வாழ்த்துகின்றேன்.

**ச. வேலழகன் (SLPS-I), தலைவர் அதிபர் சங்கம், கோப்பாய்க் கோட்டம்.**



### வாழ்த்துகின்றேன்

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வெள்ளெருவைப் பிள்ளையாரை தினசரி காலை வழிபாடு செய்து வருபவர் இன் றைய விழா நாயகர். பிள்ளையார் மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர். எந்தக் காரியத்தை எடுத்தாலும் சரிவரச் செய்து முடிக்க வேண்டுமென் பதில் மிகுந்த ஆர்வமுடையவர். தற்போது எமது ஆலயத்தின் திருப்பணிச்சபையின் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார். ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவரை அறுபதா வது வயதில் வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகின்றேன். இவரும் இவரது குடும்பத்தவரும் சீரோடும் சிறப்போடும் வாழ வாழ்த்து கின்றேன்.

**சச்சிதானேஸ்வரக்குருக்கள்**
**சண்முகராஜேஸ்வர குடும்பம் (ஆதீனகர்த்தா)**
**வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில், கோப்பாய்.**



### இவர் சமூக நட்சத்திரம்

திருவாளர் முத்துச்சாமி விக்னேஸ்வரன் அவர்கள் 02.05.1983 இல் இறக்குவானை நாவின்ன அ.த.க. பாடசாலையில் ஆசிரியராக தனது நற்பணியை ஆரம்பித்தார். இவர் தனது சீரிய கல்விப் பணியினால் யா/உரும்பிராய் றோ.க. த.க.பாடசாலையில் அதிபராக 15.02.1999 இல் பதவியுயர்வு பெற்றார். தொடர்ந்து யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் பதவியை ஏற்று சிறப்பாக கடமையாற்றினார். பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளிலும் பௌதீகவள விருத்தியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தனக் கென தனியிடம் பிடித்தவர் இவர். இவரது அயராத உழைப்பி னால் 28.09.2015 ஆம் திகதி யா/உரும்பிராய் சைவத் தமிழ் அன்னை நூற்றாண்டு விழாவினை நிறைவாக மகிழ்வுடன் கொண்டாடினார். பல சமூக நிறுவனங்களின் தலைவராகவும் நிர்வாகசபை உறுப்பினராகவும் இருந்து நற்பணியாற்றி மகிழ்வு றும் விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு சமூக நட்சத்திரம். நூற்றா ண்டு காலம் நோய் நொடியின்றி அருளுடனும் பொருளுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்துப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

**திரு.நா.சிவநேசன், கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**கோட்டக் கல்வி அலுவலகம், கோப்பாய்.**

### செயல்வீரன் விக்கி

எப்போதும் கலகலப்பானவர். அன்பாகவும் மதிநுட்பமாகவும் பேசி எல்லோரையும் ஈர்க்கும் வல்லமையுடையவர். திட்டமிட்டுப் பணியாற்றும் செயற்திறன் மிக்கவர். எடுத்த பொறுப்புக்களைச் சரிவரச் செய்பவர், சமூகத்தை நேசிப்பவர். ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துவோம்.

**ஞா.அன்ரன் பிறேமதாஸ், அதிபர்**
**யா/ ஊரெழு கணேசா வித்தியாலம்.**



### கடமையை நேசிப்பவர்.

எண்ணமும் செயலும் ஒன்றித்துச் செயற்படும் மனிதர்களில் விக்னேஸ்வரனும் ஒருவர் என்பதை அவருடன் பணி செய்யும் போது அறிந்து கொண்டேன். வருகின்ற தடைகள், துன்பங்களை யெல்லாம் சாதுர்யமாக முகம் கொடுத்துக் கொண்டு வெற்றி பெற்றவர். இக் கடமையை நேசிப்பவர். ஓய்வுக்காலமும் ஒளிமயமாகப் பிரார்த்திக்கின்றேன்.

**செல்வி ப.வாசுகி,**
**அதிபர், யா/ சந்திரோதய வித்தியாலயம், உரும்பிராய்.**



### எப்போதும் கலகலப்பானவர்

அனைவரையும் சாதுர்யமாக ஒருங்கிணைத்து திட்டங்களையோ செயற்பாடுகளையோ நடைமுறைப்படுத்தும் வல்லமை கொண்டவர். எங்கள் விக்கி பல்வேறு சவால்களை இலகுவான முறையில் எதிர்கொண்டு தொழிலிடத்திலும் சமூக அமைப்புக்களிலும் மன உறுதியுடனும் திட சங்கல்பத்துடனும் வெற்றி கொள்வது இவரது சிறப்பு. இதனால் இவர் பலரது நன்மதிப்புக்களையும் பெற்றுள்ளார். எல்லோருடனும் கலகலப்பாகப் பேசி நட்புரிமை யுடன் பழகியவர். பிள்ளையாரின் திருவருளுடன் எமது கோயி லில் திருப்பணிச் சபை தலைவராக செயற்பட்டு வரும் இவரை வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

**கு.வாகீசன் (அதிபர்) இடைக்காடு ம.வி.**
**பொருளாளர், திருப்பணிச் சபை,**
**வெள்ளெருவைப்பிள்ளையார் கோயில் கோப்பாய்.**



### பாராட்டுகிறேன்.

பத்து வருடங்கள் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் பணியாற்றிய காலத்தை எண்ணி மகிழ்கிறேன். அன்பானவர், பண்பானவர், பழக இனியவர், பாரபட்சமற்றவர், மாணவர் நலனில் அதிக அக்கறையுடையவர், எடுத்த கருமத்தை சிறப்புடன் நடத்துவார். இவரின் ஓய்வுக் காலத்தில் எல்லா நலன்களும் பெற்றிட இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பா.சத்தியநாதன், முன்னாள் தலைவர், ஆசிரியர் கழகம் , பகுதித் தலைவர், ஆரம்பப்பிரிவு**



## திரு.மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
## யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

பிறப்பு: 30.09.1957 கோப்பாய்.
தந்தை: (அமரர்) க.முத்துச்சாமி, ஓய்வுநிலை அதிபர்.
தாய்: திருமதி.மு.இராசம்மா, ஓய்வுநிலை ஆசிரியர்.
சகோதரன்: மு.கோணேஸ்வரன்.

**(சேவை விபரம்)**

1. இ/நாவின்ன அ.த.க.பாடசாலை,இறக்குவானை (ஆசிரியர்)
   02.05.1983-28.02.1984
2. இ/றில்லேன அ.த.க. பாடசாலை,பெல்மதுளை (பதில் அதிபர்)
   01.03.1984 - 31.11.1984
3. இ/ஹேறாட்டன் அ.த.க. பாடசாலை,கலவாற (பதில் அதிபர்)
   01.12.1984-01.01.1985
4. யா/கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை (ஆசிரியர்)
   01.02.1985-31.12.1986
5. கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை, கிளிநொச்சி (ஆசிரியர்)
   01.01.1987-15.06.1990
6. யா/உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை,உரும்பிராய். (ஆசிரியர்)
   15.06.1990-31.12.1997
7. யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை,நீர்வேலி (ஆசிரியர்)
   01.01.1998-14.02.1999
8. யா/உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை,உரும்பிராய் (அதிபர்)
   15.02.1999-10.10.2006
9. யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய் (அதிபர்)
   11.10.2006-20.09.2016
10. வட மாகாண கல்வித் திணைக்களம், பரீட்சை அலுவலர்- வளவாளர்
   21.09.2016-30.09.2017

**ஆரம்பக் கல்வி**

1.இ/நீலகாமம் அ.த.க.பா, கஹவத்தை.
2.இ/பெல்மதுளை அ.த.க.பா, கஹவத்தை.

**இடைநிலைக்கல்வி**

3.இ/சிறி கிருஷ்ணா வித்தி, கஹவத்தை.

**உயர்கல்வி.**

4. யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.

**பட்டப்படிப்பு**

5. பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

**பட்டப்பின் படிப்பு**

6. தேசிய கல்வி நிறுவகம், மஹறகம.



### கவர்ச்சிகரமான தலைமைத்துவம்

எவ்விடயத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு, முடிவெடுப்பதற்கு தயங்கியவர் அல்ல. Take it easy . செய்வம் பொறுப்பெடுப்பம் ஒன்றும் யோசிக்காதேங்கோ எல்லாம் வெல்லலாம், எல்லாம் நாங்கள் தான். இது தான் இவரது தலைமைத்துவத்தின் தாரக மந்திரம். இதுவே இவரது வெற்றிக்கு வித்தாகவும் வேராகவும் இருந்ததை நானறிவேன். இவரின் இப்பணி ஓய்வு காலத்திலும் தொடரவும் சீரோடும் சிறப்போடும் வாழ்த்துகின்றோம்.

**ஞா. கென்னத் (அதிபர்), யா/ உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை**

### எதிலும் சிறப்பு

பாடசாலை கவிநிலை, கல்வி நிலை, பௌதீகவளம், பாட விதானம், இணைப்பாடவிதானம் ஆகியவற்றைச் சிறப்பாக நடத்தி முடிக்க வேண்டும் என்பதில் உறுதியுடையவர். இந்நிலையில் கடந்த பத்து வருடங்களாக ஓய்வின்றி பணியாற்றி எமது பாடசாலையை உலகம் அறியச் செய்த வர். இவர் ஓய்வுக்காலம் சிறப்புற ஓடையம்பதி பிள்ளை யாரைப் பிரார்த்திக்கின்றேன்.

**ந.கணேசலிங்கம் (JP)**
**பழைய மாணவர் சங்கம், செயலாளர்,**
**யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்**

# ன் மணிவிழா சிறப்புமலர்-2017



திபர்)

யாலயம்



### வாழ்த்துச் செய்தி

யா/உரும்பிராய் றோ.க.த.க.பாட சாலை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி யாலயம் ஆகியவற்றில் முன்னை நாள் அதிபர் திரு.மு.விக்னேஸ்வரன் அவர்கள் மணிவிழாக் காண்பதையிட்டு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறந்த ஆசிரியர் என்பதற்கு அப்பால் மிகச் சிறந்த அதிபர் என்ற பெருமை யையும் இவர் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து இவர் பெற்றுக்கொண்ட கௌரவமும் அங்கீகாரமும் சிறப்பாக குறிப்பிடப்பட வேண்டியது. ஓய்வு நிலையில் மிகவும் மகிழ்ச்சியான வாழ்வு கிடைக்க வேண்டுமென வாழ்த்தி பிரார்த்திக்கின்றேன்.

**சீ.வீ.கே.சிவஞானம், அவைத் தலைவர்,**
**வடக்கு மாகாண சபை.**



### Message from provincial English Coordinator, Northern Province

I Would Like to convey my regards on the retirement of Mr.M. Vikneswaran, Principal of J/Urumpirai Saiva Tamil Vidyalayam, who has served for more than three decades' of time in his services as a teacher and Principal in Sabragamuwa and Northern Province.

Although he had a nice opportunity to be promoted to a higher post in the educational field, he had chosen to be proficient in his job and became an efficient educator.

He had dedicated his whole life to the well being of students who studied in his school. He is well known in the educational circle for his courtesy and also around the premises of his residence.

I wish him a peaceful life when he retires and hope a successful and prosperous future would be awaiting him. May the Almighty God, the giver of gifts would bless him and his family with long wealthy and healthy life.

**Mr.K.Varnakularajah,**
**Provincial English Coordinator,**
**Northern Province.**



### அர்ப்பணிப்பு மிக்கவர்

திரு. முத்துச்சாமி விக்னேஸ்வரன் இரத்தினபுரியில் உள்ள ஒரு பாடசா லையில் சேவையை ஆரம்பித்து வடமா காண கல்வித் திணைக்களத்தில் சேவையை முடித்து இளைப்பாறுகின்றார். நல்லதொரு ஆரம்பக் கல்வி ஆசிரியர். அர்ப்பணிப்பான அதிபர். இவரது சேவை க்காலத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் சகல துறைகளிலும் வளர் ச்சியடைந்தது. அதற்குக் காரணம் அவரது அயராத முயற்சியும் அர்ப்பணிப்புமே. கலகலப்பாகப் பேசி அனைவரையும் கவர்ந்தி முக்கும் விக்னேஸ்வரன் அதிகாரிகளையும் மகிழ்வித்துத் தனது காரியங்களை வெற்றி கரமாக முடிப்பவர். பாடசாலையின் தேவைகளை அதிகாரிகளுக்கும் பழைய மாணவர்களுக்கும் நல்ல முறையில் எடுத்துரைத்துத் தனது சேவைக் காலத்தில் அவற்றைப் பெற்று பாடசாலையை முன்னேற்றியவர். அவரின் ஓய்வு காலம் நல்ல முறையில் அமைய அவரது குலதெய்வ மான வெள்ளெருவை விநாயகர் உறுதுணை புரிவார்.

**கே.வி. குணசேகரம்,**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர். (ஓய்வு)**
**www.gunasegaram.com.**



### வழிகாட்டியை வாழ்த்துகிறேன்

நான் ஆசிரியத் தொழிலில் காலடி வைத்த போது என்னை அன்போடு அரவ ணைத்து வழிகாட்டிய பெருமைக்குரியவர். இந் நிலையில் அவரைத் தொடர்ந்து இப் பாடசாலையில் அதிபராகப் பதவியேற் றமை மகிழ்ச்சிக்குரியதே. தனித்துவ மான ஆற்றல்கள் கொண்ட இவரின் பாதை யில் பயணங்கள் தொடரும். அவரின் ஓய்வுக் காலம் சிறப்படைய பாடசாலையில் எழுந்தருளியிருக்கும் பாலமுருகனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சுந்தரம் திருநாவுக்கரசு (அதிபர்),**
**உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.**



### நட்புக்கு இலக்கணம்

ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந் தான் என்பது முக்கியமல்ல. வாழும் காலங்களில் என்ன செய்தார் என்பதைப் போல் அதிபர் அவர்கள் ஆசிரியப் பணி, அதிபர்பணி , அத்துடன் சமூகச் சேவைக ளிலும் சிறந்து விளங்கியவர். அரச பணி யிலிருந்து ஓய்வு பெறும் அதிபர் நல்ல தேக ஆரோக்கியத்துடன் குடும்பத்தின ருடன் இன்புற்று வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**லயன் Dr. வே.கணேசவேல் (J.P.)**
**சுந்தரவேல் வைத்தியசாலை , உரும்பிராய் வடக்கு.**



### வாழ்த்துச் செய்தி

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி யாலயத்தில் மிக நீண்ட காலம் அதிப ராகக் கடமையாற்றி பின்பு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் வளவாளரா கச் செயற்பட்டு ஓய்வு பெறும் திரு.மு.விக் னேஸ்வரன் அவர்களது சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

இவர் ஆசிரியராகப் பணியாற்றிய பாடசாலைகளில் தனது பணியினை சிறப்பாக நிறைவேற்றி யுள்ளார். யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் அதி பராகக் கடமையாற்றிய காலத்தில் இப்பாடசாலையினது மாண வர்களது எண்ணிக்கை அதிகரித்ததோடு இப்பாடசாலையானது கல்விப் பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதான செயற்பா டுகளிலும் உயர்வான நிலையை எட்டியிருந்தது.

இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் சமூகப் பணி தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்,மாகாணக் கல்விப் பணிப்பாளர்.**



### விக்கினங்களைத் தீர்ப்பவர்

ஆசிரியர் நலன்களுக்கு மதிப்பளித்து மதிநுட்பமாக கற்றல் கற்பித்தல் செயற் பாட்டை வினைத்திறனாக்கிப் பத்து வருட ங்களுக்கு மேலாக எமது பாடசாலையை வழி நடத்தி பல தரப்பினர்கள் பாராட்டைப் பெற்றவர் அதிபர் விக்னேஸ்வரன். பாடசாலை களிலும் சமூகத்திலும் விக்கினங்களைத் தீர்த்து வைக்கும் விக்னேஸ்வரனை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எதிர்கால நலன்களுக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.வ.நவலோகநாதன்,**
**தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்**



### ஆளுமை மிக்கவர்

விழா நாயகன் என்னுடன் சம காலத் தில் அதிபராக கடமையாற்றிய போது கோப்பாய் கோட்ட கல்விப்பணிப்பாளரு டனும் அதிபர்களுடனும் இணைந்து இப் பிரதேச பாடசாலைகளின் கல்வி வளர் ச்சிக்கும் இணைப்பாடவிதான செயற்பா டுகளுக்கும் முன்னின்று உழைத்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட காலம் அதி பர் சங்கத் தலைவராகவும் செயலாள ராகவும் செயற்பட்டவர். ஆல யங்கள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கம், வைத் தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றினதும் தலைவராக, செயலாளராக கடமையாற்றியுள்ளார். இவரது பொதுப்பணி பாராட்டத்தக்கது. இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் சமூக, சமயப் பணிகளில் தொடர்ந்தும் சிறந்த சேவையாற்ற வாழ்த்துகிறேன்.

**க.இ.இராசசேகரம், ஓய்வுநிலை அதிபர்,**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**



### பலரது பாராட்டைப் பெற்றவர்

எமது பாடசாலையில் பத்து ஆண் டுகள் அதிபராகக் கடமையாற்றி பல யுக்திகளைப் பயன்படுத்தி பலரது பாரா ட்டையும் பெற்று பாடசாலையின் பெயரை உலகறியச் செய்த பெருமைக்குரியவ ரைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின் றேன். இவரின் ஓய்வுக்காலம் சிறப்புற கற் பக விநாயகரைப் பிரார்த்திக் கின்றேன்.

**திருமதி தேவிகா சிவானந்தராசா,**
**பாடசாலை அபிவிருத்தி செயலாளர்,யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.**



### தற்துணிவு மிக்க முகாமையாளர்

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பணியாற்றி இன்று மணி விழாக்காணும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அதிபர் திரு.மு.விக் னேஸ்வரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின் றேன். நாட்டின் பல பாகங்களிலும் நல்லாசிரியராகப் பணி யாற்றி மாணவர்கள் பலரது உள்ளத்தில் நீங்கா இடம்பிடித்த இவர் கோப்பாய் கோட்டத்தின் பாடசாலைகள் பலவற்றில் அதிபராகக் கடமையாற்றிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்.

சிறந்த முகாமைத்துவத் திறனும் எத்தகைய காரியத் தையும் சிறப்பாக நிறைவேற்றும் தற்துணிவும் மிக்கவர். கண்ணியம்மிக்க கடமையுணர்வும் சிறந்த நிர்வாகத் திறனும் மிக்க திரு.மு.விக்னேஸ்வரன் அவர்கள் இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து சமூகத்திற்கு நற்பணி ஆற்றவேண்டுமென இத்தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

**அ.அகிலதாஸ், பிரதிக் கல்விப் பணிப்பாளர். யாழ். கல்வி வலயம்.**



### வலயக் கல்விப் பணிப்பாள ரின் வாழ்த்துச் செய்தி

திரு.முத்துச்சாமி விக்னேஸ்வரன் அதிபர் தனது 30 ஆண்டுகள் கல்விப் புலம்சார் சேவையை சிறப்பாகப் பூர்த்தி செய்து இளைப்பாறும் இத்தருணத்தில் வளமான வாழ்த்துச் செய்தி வழங்கு வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மலையகத்திலும் வடபுலத்திலும் கல்வி கற்றும் கற்பித்தும் தன் தொழிலால் சிறந்த பண்பாளன். சிறந்த தலைமைத்துவப் பண் புகளைத் தனதாக்கிக் கொண்ட இவர் அப்பண்புகளை ஆசிரிய ர்களுக்கும் அரிய மாணாக்கர் களுக்கும் அள்ளி வழங்கும் அருளாளன். தான் பணியாற்றிய பாடசால்லகளில் அவர் பணி தொடரும் நற்பணிகளை தற்பொ முதும் பார்க்கலாம். இயல், இசை, நாடகம், கலை பயில நடன த்துடன் இணைந்த விளையாட்டென இணைப்பாட விதானத்தில் இணையில்லாத ஈடுபாடு கொண்டவர். இவர் மாணவர் கற்ற கல்வியிலும் பண்புடன் பழகும் பழக்கத்திலும் அதிபர் விக்னேஸ் வரனின் வீரமுறு இணைச்செயற்பாட்டை வியந்து நோக்கலாம்.

சிரித்த முகமும் மிகுந்த துணிவும் சகலத்திற்கும் மேலாக சோராத சுறுசுறுப்பும் கொண்ட அதிபர் விக்னேஸ்வரன் அனைவருடனும் அன்புடன் நற்புறவைப் பேணுவதில் முதன் மையானவர். இவரது அறிவு, ஆற்றல், அனுபவம் அயராத உழைப்பு காத்திரமானது.

இல்லாள், இனிய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சுற்றத் தாருடன் பல்லாண்டு நல்வாழ்வு வாழ திரு.மு.விக்னேஸ் வரனை வாழ்த்துகின்றேன்.

**ந.தெய்வேந்திரராஜா,**
**வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**



### இவர் அமுத சுரபி

அகவை அறுபதிலோ அதிபர் எங்கள் விக்கி
அவர் தம் கடமையிலோ நாங்கள் நின்றோம் சொக்கி
அனைவரையும் அரவணைக்கும் ஒளி வீசும் நெற்றி
அதனால் தான் அவர் அடைந்தார் என்றுமே வெற்றி
புன்முறுவல் ததும்பி நிற்க புரிவார் நல் உதவி
பூர்வ ஜென்ம புண்ணியம் தான் அவர் பெற்ற பதவி
எம்மிருந்து பிரிகின்றார் எல்லோர் கண்வழியே அருவி
எக்காலமும் நாம் மறவோம் இவர் அமுத சுரபி.

**A.S.சற்குணராஜா,**
**பிரதிக்கல்விப்பணிப்பாளர்,**
**வடமாகாணக் கல்வித்திணைக்களம்.**



### உயர் பண்புகளின் உரித்தாளன்

அதிபர் என்ற வகையில் விக்கியின் சிறப்பியல்புகளில் ஒன்று எதையும் வெளிப் படையாகப் பேசும் இயல்பு. அதிபர் கூட்டங்களில் கேள்விக் கணை களைத் தொடுப்பார். அது எதிர்மறை யாகச் செயற்படுவதற்கோ குறை காண் பதற்காகவோ அல்ல. ஆனால் அது ஆரோக்கியமான தீர்மானத்திற்கு வழி வகுக்கும். ஒப்படை க்கப்படும் பொறுப்புக்களை உரிய காலத்தில், உரிய முறை யில் செயற்படுத்துவது, மற்றொன்று கோட்ட மட்டப் பரீட்சை களை நடத்துவதில் கால நேரம், மழை வெயில் பாராது ஒத்துழைத்தல். இச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக நின்ற அதேவேளை உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றையும் உச்ச நிலைக்குக் கொண்டு வந்தவர். இவரது ஓய்வுக்காலம் வளம் பெற வாழ்த்துகிறேன்.

**வே. பாலசுப்பிரமணியம் ,**
**முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்.**



### மறக்க முடியாத அதிபர்

உரும்பிராய் றோ.க.வித்தியாலயம், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியால யம் ஆகிய இரு பாடசாலைகளிலும் மிக நீண்ட கால்ங்கள் அதிபராக இருந்து அரும்பணி ஆற்றிய அதிபர் மு.விக்னேஸ் வரன் அவர்களை இப்பாடசாலை மாணவ ர்கள் மட்டும ன்றி உரும்பிராய் பிரதேச மக்களும் என்றுமே மறக்க மாட்டார் கள். அணியப் பாடசாலைகளின் அதிபர்கள் என்ற ரீதியில் அவ ரோடு இணைந்து நாம் ஆற்றிய சேவைகள் என்றுமே மறக்க முடியாதவை. அகவை அறுபதில் ஓய்வுபெறும் அவரது எதிர்கா லம் நோய் நொடி யின்றி குடும்பத்தினருடன் குதூகலமாக திகழ என் வாழ்த் துக்களை தெரிவிக்கின்றேன்.

**அ.அருணந்திசிவம்,**
**அதிபர், உரும்பிராய் இந்துக் கல்லூரி.**

**யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய**
**பாடசாலை சமூகம் மற்றும் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள்**

# பள்ளிவாசல் நிர்மாணிக்கும் அதிகாரத்தை முஸ்லிம் விவகார அமைச்சிடம் அளிக்கவும்

## முஸ்லிம் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்களை நிர்மாணிக்கும் அனுமதியை வழங்கும் அதிகாரம் தற்போது புத்தசாசன அமைச்சிடம் காணப்படுவதாகவும் அதனை முஸ்லிம் விவகார அமைச்சிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அசாத் சாலியால் இதற்கு முன்னதாக ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்ட எழுத்து மூல கோரிக்கைக்கு அமைய அமைச்சர்களான றிசாத் பதியுதீன். ரவூப் ஹக்கீம் மற்றும் அசாத்சாலி ஆகியோர் மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடலில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

இதன்போதே மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.





இதனையடுத்து இந்த விடயம் குறித்து ஆராய்வதாக ஜனாதிபதியால் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# ரோஹிஞ்யா அகதிகள் மீது தாக்குதல் விசாரணை குற்றத் தடுப்புப் பிரிவிடம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள மியன்மார் ரோஹிஞ்யா அகதிகள் மீது நடந்தேறிய பிக்குகளின் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்குமாறு கல்கிஸை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன். இச்சம்பவம் தொடர்பில் திருத்தப்படாத காட்சிகளை ஊடக நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன நீதிமன்ற அனுமதியைப் பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ-3)

# அமெரிக்க-இலங்கை படைகளுக்கிடையில் புலனாய்வு நிபுணத்துவப் பரிமாற்றங்கள்



(கொழும்பு)

அமெரிக்க கடற்படையின் பசுபிக் கப்பல் படையின் பிரதிநிதியான லெப்.கொமாண்டர் ரூபென் புலோப்வ்ஸ் ரெய்ன் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கை கடற் படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கைக் கடற்படையினர் மற்றும் அமெரிக்க கடற்படை புலனாய்வுப் பணியகம் மற்றும் அமெரிக்க பசுபிக் கடற்படை ஆகியவற்றுக்கிடையில்,- புலனாய்வு விடயங்கள் தொடர்பான நிபுணத்துவ பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஒரு கட்டமாகவே இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் கடற்படை ஆலோசகர் லெப். கொமாண்டர் பிரையன் பேஜூம் கலந்து கொண்டார். (இ-3)

# கட்டுநாயக்க விமான நிலையம் இரண்டு மணிநேரம் முடக்கம்

## பயணிகள் அவதி

கட்டுநாயக்க அனைத்துலக விமான நிலையத்தின் கணனி வலையமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினையால் நேற்று முன்தினம் பிற்பகல் விமான நிலையத்தில் பயணிகள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகினர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு இந்த தொழில்நுட்ப பிரச்சினை ஏற்பட்டது. மாலை 4.30 மணி வரை இந்த நிலை நீடித்தது. இது உலகம் முழுவதிலுமுள்ள விமான நிலையங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பயணிகளின் ஆவணங்களைச் சோதனையிடும் இணையவழி வலையமைப்பிலேயே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இணையவழி சோதனைகள் முடங்கியதால் உள்வரும். வெளிச்செல்லும் பயணிகளை அனுமதிக்க முடியாமல் அதிகாரிகள் திணறினர்.

அதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் கணனிகளில் கடவுச்சீட்டு விபரங்களை பரிசோதிக்க முடியாதிருந்த போதிலும் பயணிகளுக்கான பயண அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



உலகில் சுமார் 100இற்கும் மேற்பட்ட விமான சேவை நிறுவனங்களுக்கு இணையவழி பரிசோதனை மென்பொருளை வழங்கி வரும் அமாடியஸ் நிறுவனத்தின் பிரதான வழங்கல் மையத்திலேயே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

லண்டனின் ஹீத்ரோ மற்றும் கட்விக், பாரிஸ், சிங்கப்பூரின் சாங்கி, ஜொகனஸ்பேர்க், மெல்பேர்ன், சூரிச் மற்றும் வோஷிங்டனின் றீகன் விமான நிலையம் போன்றனவும் இந்த தொழில்நுட்ப பிரச்சினையால் பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (இ-3)

## இன்று ஒரு தகவல்

### ஆதிக்க மனநிலை அவசியம்தானா?

ஒருவர் ஒரு திருமணம் நடக்கக் காரணமாக இருந்தார். பெண் வீட்டார், பிள்ளை வீட்டார் இருவருமே இவருக்கு வேண்டியவர்கள் என்ற வகையில் இவர்தான் திருமணத்தைப் பேசி முடித்தார்.

இவர் தான் மண்டபம் பார்த்தார். இவர்தான் இசைக் கச்சேரிக்குழுவை முடிவு செய்தார். போகப் போக இவரது ஆட்டமும் ஆதிக்கமும் பொறுக்க முடியவில்லை. ஏகப்பட்ட செலவுகளை இழுத்து விட்டார். எல்லாவற்றிலும் தலையிட்டார். இரு வீட்டாரும் முதலில் கொஞ்சம் தர்மசங்கடத்தில் நெளிந்தார்கள். பெண்ணுக்குத் தாய்மாமாவோ பொறுமை யிழந்து ஒரேகத் தாகக் கத்திவிட்டார்.

அவ்வளவுதான் அண்மையில் நடந்து முடிந்த இந்தத் திருமணத்திற்கு இந்த மனிதர் போகவே இல்லை. நான்தான் இந்தக் கல்யாணத்தைப் பேசி முடிச்சேன். இரண்டு பேருக் குமே நன்றி விசுவாசம் இல்லை என்று இப்போது புலம்பிக் கொண்டிருக்கிறார் இந்த மனிதர்.

திருமணம் பேசி முடிந்ததும் தன்னால் தான்; தான் வைத்தது தான் சட்டம்; நான் சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது என்று இவர் நினைக்க ஆரம்பித்ததால் வந்த கோளாறு இது. தன் எல்லை என்ன என்பதையே வரையறுத்துக் கொள்ளாமல் இவர் குதித்த குதிப்பு இவரை இன்று மூலையில் உட்கார வைத்து விட்டது என்பதே உண்மை.

தன்னால் தான் குடும்பம் நடக்கிறது என்கிற உணர்வு பெரிய மகளுக்கு. எல்லோரும் இவளை நம்பித்தான் என்கிற நிலை குடும்பத்தில் நிலவினாலும் இவளுடைய ஆதிக்கம் தாங்க முடியாமல் போனது. வெளியில் சிரித்து உள்ளூர வெறுத்த குடும்ப உறுப்பினர்கள் இப்போது அதை வெளியேயும் காட்ட ஆரம்பித்தார்கள். அம்மையார் எவரும் என்னை மதிப்பதில்லை என்று ஒரே புலம்பல் புராணம் பாடுகிறார்.

ஒருவர் வீடு கட்டத்தன் நண்பருக்கு உதவினார். தன்னால் தான் எல்லாம் என்று நடந்து கொண்டார். இன்று இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லை.

இரு பங்குதாரர்கள் ஒருவர் மகா கெட்டிக் காரர். மற்றவர் நிறைய மூலதனம் உள்ளவர். பணமும் திறமையும் இணைந்தன. வியாபாரம் செழித்தது. கெட்டிக்காரருக்கு எல்லாம் தன்னால் தான் என்கிற ஆதிக்க மனநிலை வளர்ந்தது. தாட் பூட் தஞ்சாவூர் என்று நடந்து கொண்டார். பணக்காரர் இவரை ஒரேநாளில் வெளியே தூக்கி எறிந்து விட்டார். வெறும் திறமை இப்போது கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது. ஒன்று மட்டும் உறுதி.

பண்ணையார்– மிராசு தாரர் மனநிலையை வளர்த்துக் கொண்டு குதித்தவர்கள் எல்லோரும் இருக்கிற இடம் தெரியாமல் அலாக்காகத் தூக்கி எறியப்படுவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# சாமி அன் சன்ஸ்
## Samy & Sons

கோவில்களுக்குத் தேவையான பூஜைமணி, பெரியமணி, கிடாரம், திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி, கும்பத்திற்குரிய செம்பு வகைகள், சருவம், குடம், தீபம், எவர்சில்வர், அன்பளிப்புப்பொருட்கள், பித்தளைச்செம்பு, அலுமினியப் பொருட்கள் முதலியன சிறந்த முறையில் எலக்றோ பிளேற்றிங் மற்றும் பொலிஷிங் செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர் : இரத்தினேஸ்வரன்
313, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
077 847 1810

# ஹரன் டிரேடர்ஸ்

71/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9392, 0777 11 24 90

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் ஒயில் வகைகள், பற்றரிகள், ஹெல்மட்டுகள், ரயர்வகைகள் விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

# ஒரு எண்ணெய் ! ஆரோக்கியமான பல நன்மைகள்!!!

- முடி உதிர்வு, பொடுகுத் தொல்லையா?
- கருமையான நீண்ட கூந்தல் வேண்டுமா?
- முகத்தில் கரும்புள்ளி, கருவளையமா?
- முகப்பருவா?
- தோல் சுருக்கமா?
- உதடு, குதிக்கால் வெடிப்பா?
- உடற்பருமன், Cholesterol Blood Sugar இதய நோய் பிரச்சினையா?

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம் — Royal

இன்றே பாவியுங்கள்!!!

"றோயல் ஓர்கானிக் வேர்ஜின் தேங்காய் எண்ணெய்"

- 100% Natural
- Cold Pressed
- No Refining
- No Bleaching

Re- Packed By : Royal Industry R Colombo - 12

சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா R
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி - 021 222 2567


# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 30.09.2017

# 'கண்ணனைத் தாங்கி வரும் கருட வாகன மகிமை'

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான காத்தற் கடவுள் கண்ணனைத் தாங்கி வரும் கருட பகவானின் மகிமை சொல்லில் அடங்காது. உலகைக் காக்கும் பரம் பொருளாம் கண்ண பரமாத்மாவுக்கு கருடன் வாகனமாகும். இந்தக் கருட பகவான் மகா விஷ்ணு மூர்த்தியையே தாங்கி வருகின்ற பெரும் பாக்கியத்தை பெற்றிருக்கின்றார். பட்சி இனத்தைச் சேர்ந்த கருடன் மனித உருவுடன் இறக்கைகள் தாங்கி எல்லாம் வல்ல ஸ்ரீ கண்ண பரமாத்மாவுக்கு சேவை செய்கின்ற நோக்கில் தோன்றியதாக விஷ்ணு புராணம் கூறுகின்றது.





அப்பேற்பட்ட பெருமையுடன் கூடிய மாண்புமிக்க கருட வாகனத்தை கொனிக்கா, சிறிராம் உரிமையாளர் திரு.திருமதி ஸ்ரீதரன் குடும்பத்தினர் உபயமாக தேவஸ்தானத்திற்கு வழங்கியுள்ளனர். அதை விஸ்வ குல லோகத்தால் வியத்தகு முறையில் சிற்பசாஸ்திர ரீதியாக புதிதாக வடிவமைத்திருக்கின்றார். அழகிய கருடபகவானின் தோற்றத்தை மிகவும் அதிசயிக்கத்தக்க அற்புத வடிவில் செய்திருப்பது கண்ண பரமாத்மாவின் நற்கருணை என்றே கூற வேண்டும். அவருக்கு எமது நல்வாழ்த் துகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும். எம் பெருமான் வண்ணை வெங்கடேசன் தேர் மீது ஆரோகணித்துவருகின்ற இந்த நன் நாளிலே நவராத்திரி பத்தாம் நாள் விஜயதசமி வெற்றி திருநாளிலே வெள்ளி கருட வாகனம் இந்த வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் கம்பீரமான இராஜ கோபுரத்திலே அடிக்கடி வந்து உண்மையாகவே அமர்ந்திருக்கும் அற்புதத்தையும் இங்கு குறிப்பிட வேண்டியது சிறப்பம்சமே.

ஸ்ரீமகா விஷ்ணு வானவர் பன்றியுரு கொண்டு ஜோதிபிழம்பின் அடியை தேடிய வரலாற்றிலே கருட பகவானுடைய பெருமையும் இடம்பெறுகின்றது. அத்துடன் இராமாயணத்திலே சடாயுவாக வந்து இராவணேஸ்வரனுடன் போரிட்டு இறக்கைகளை இழந்த நிலையில் இராம லட்சுமணர்களை சந்தித்து சீதையை கவர்ந்த இராவணன் சென்ற திசையைத் தலையை அசைத்துக் காட்டியமையும் நோக்கத்தக்கது.

தனிப்பெருமை மிக்க சடாயுவின் பட்சியினத்தோன்றலே கருடன் என்று கூறு வருமுள்ளர்.

அது மாத் திரமின்றி மகா விஷ்ணுவைத் தாங்குகின்ற பெரும் பேறைத் தமக்கு தந்தருள வேண்டுமென்று கருட வாழ்வார் தவமிருந்து வரம் வேண்டியதாகவும் சொல்லப்படுகின்றது. அத்தகைய கருட பகவானுடையவெள்ளி வாகனம் பெருமாளுக்கு கிடைத்தமையையிட்டு நாம் மிகவும் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஈழத்து திருப்பதி என்று போற்றப்படுகின்ற யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவேங்கடேச பெருமாள் தேவஸ்தானத்தை நல்லமுறையில் பேணிப் பாதுகாத்து திருப்பணி வேலைகள் அதிசயிக்கத்தக்க முறையில் அகான முறையில் நிறைவேற்றி அற்புதமாகக் கடமை புரியும் மார்க்கண்டேய கோத்திரஸ்ரீ பத்மசாலிச் செட்டிமாருடைய பணி பாராட்டுக்குரியது.

இன்று வெங்கடேசனின் தேர்ப்பவனி நாளிலே வெள்ளோட்டமாகி நகர்வலம் வந்து ஊர்வலம் நிகழும் வெள்ளிக் கருட வர்கனத்திலே எம்பெருமான் இன்று தேர் உற்சவத்திற்கு எழுந்தருளி வந்து அருட்காட்சி தந்து அருள்பாலிக்கவுள்ளமை நாம் செய்த பூர்வ புண்ணியப் பேறு என்று தான் சொல்லவேண்டும்.

**தெய்வத்தமிழ்ச்சுடர்**
**இராசையா ஸ்ரீதரன்**




# சாரங்கா
## நகை மாடம்
## Sharanga
Money Exchange (Pvt) Ltd



No.157/1, Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 6972 | Fax: 021 222 8869.
Email: sarankajewellers@yahoo.com
Web: www.saarangajewellers.com

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம



# கவியரசு
## நகைப் பூங்கா

இரத்தினக் கற்கள், தங்க ஆபரணங்கள் மற்றும் சகலவிதமான ஜாதிக் கற்களையும் மலிவான விலையில் வாங்குவதற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரேஸ்தாபனம்.

190, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 5438

Distributors for Lanka Tiles, Lanka Wall Tiles, Tokyo Cement, Multibond, Union PVC Pipes, Jat Holdings, Sanitarywares, Bathroom Accessories, Etc...

High Qhality Products Available under One Roof

LANKATILES GROHE NIPPON CEMENT HUIDA TOKYO SUPER Multibond

**Narayana Hardwares Trader**

#92C, Stanley Road, Jaffna

Phone : 021 222 5390, 021 567 5390
Fax: 021 222 5390
e-mail: nhtjaffna@gmail.com

# கொரிய தீபகற்பத்தில் பதற்றம்

## வடகொரிய எல்லையில் ரஷ்ய இராணுவம் குவிப்பு

(மொஸ்கோ)

வடகொரிய எல்லையில் ரஷ்ய இராணுவத்தினர் பெருமளவு குவிக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளதால் கொரிய தீபகற்பத்தில் போர் ஏற்படும் சூழல் நிலவிவருகிறது.



ரஷ்யா மற்றும் வடகொரியா இடையே அமைந்துள்ள ஹசன் பகுதியில் வழக்கத்துக்கு மாறாக பெருமளவு ரஷ்ய இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமின்றி சீனா, வடகொரியா மற்றும் ரஷ்ய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் சாவோ ஜியோனாரா மலைப் பகுதியிலும் ரஷ்ய இராணுவம் கடும் ரோந்துப்பணியில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியா மற்றும் அமெரிக்கா இடையே எழுந்துள்ள போர்ச் சூழல் காரணமாக தென் கொரியாவில் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவமே ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்கு காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆயுதங்களுடன் ரஷ்யா வடகொரிய எல்லையில் இராணுவத்தை குவித்து வருவது உலக அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளது. அது மட்டுமின்றி வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவின் நடவடிக்கைகளை ரஷ்யா ஒருபோதும் பார்த்துக்கொண்டு வெறுமனே இருந்துவிடாது எனவும் ரஷ்யாவின் முக்கிய அதிகாரி ஒருவர் அமெரிக்காவை எச்சரித்திருந்தார்.

மேலும் அணு ஆயுத நாடுகளில் ஒன்றாக வடகொரியாவை உலக நாடுகள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி புடின் அண்மைக் காலமாக கோரிக்கையை முன்வைத்து வந்தார்.

அதுமட்டுமின்றி ரஷ்யாவின் நடவடிக்கைகள் கொரிய தீபகற்பத்தில் அந்நாட்டை மீறி எதையும் செய்துவிட முடியாது என்ற எச்சரிக்கையை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு உணர்த்துவதாக உள்ளது என இராணுவ உயர் அதிகாரிகள் கருதுகின்றனர். (3-8)

# மும்பையில் வெடிகுண்டுப்புரளி சனநெரிசலில் சிக்கி 25 பேர் பலி!

(மும்பை)

மும்பை நகரின் பரேல் - எல்பின்ஸ்டன் வீதியை இணைக்கும் ரயில்வே மேம்பாலத்தில் வதந்தியால் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் சிக்கி 25 பேர் பலியாகினர்.

மும்பை நகரின் பல பகுதிகளில் நேற்றுக்காலை மழை பெய்தது. மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் வழக்கம்போல் தங்களது அன்றாட வாழ்க்கையை தொடர்ந்தனர்.

முற்பகல் 10.30 மணியளவில் பரேல் - எல்பின்ஸ்டன் வீதியை இணைக்கும் ரயில்வே மேம்பாலத்தின் வழியாக ரயில் பயணிகள் கடந்து சென்றபோது திடீரென்று பயங்கர வெடிச் சத்தம் கேட்டது. பாலத்தின் அடியில் யாரோ வெடிகுண்டு வைத்திருப்பதாக சிலர் கூச்சலிட்டனர்.

இந்த வதந்தியால் மக்கள் தலைதெறிக்க ஓடினர். கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் சிக்கி 25 பேர் பலியானதாகவும் காயம் அடைந்த பலர் அருகாமையில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

பின்னர் வந்த தகவலின்படி அங்கிருந்த மின் பிறப்பாக்கி வெடித்து சிதறிய சத்தத்தால் பயணிகள் அலறியடித்து ஓடியதாக தெரிகிறது. (3-8)



# ஆளும் கட்சியின் தலைவிதி உயர் நீதிமன்றில் நிர்ணயிக்கப்படும்

## மு.க.ஸ்டாலின் முழக்கம்



(சென்னை)

சென்னை உயர்நீதிமன்றில் 4ஆம் திகதி விசாரணைக்கு வரும் வழக்கில் இந்த அரசின் தலைவிதி நிர்ணயிக்கப்படும் என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு காரணமாக மருத்துவ படிப்புக். கனவு பறிபோனதால் மாணவி அனிதா தற்கொலை செய்து கொண்டார். திராவிட மாணவர் கழகம் சார்பில் மறைந்த மாணவி அனிதாவுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி சென்னை வேப்பேரி, பெரியார் திடலில் உள்ள நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மு.க.ஸ்டாலின் தெரிவித்தாவது,

'நீட்' தேர்வில் இருந்து விலக்கு பெறுவோம் என்று இங்குள்ள குதிரைபேர அரசு நம்பவைத்து நம் மாணவர்களை கழுத்தறுத்தது. அப்படி கழுத்தறுக்க துணை நின்றது மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு. ஒரு வருடத்திற்கு விலக்கு அளிக்கத்தயார் என்று மத்திய அரசு அறிவித்தது. ஆனால் அந்த விலக்கும் கொடுக்க முடியாது என்று கடைசி நேரத்தில் கைவிரித்து அனிதா பலியானதற்கு மத்திய அரசும் அதை தட்டிக்கேட்க திராணியில்லாமல் இருக்கும் குதிரை பேர அ.தி.மு.க. அரசு தான் காரணம்.

மக்களை திசைத்திருப்ப முதலில் ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்க ஒரு ஆணையத்தை அமைத்தார்கள். அந்த ஆணையத்திற்கு ஓய்வுபெற்ற ஒரு நீதிபதியை நியமித்தார்கள். நீதிபதியை நியமித்து விட்டு அமைச்சர்களே ஆளுக்கொரு பேட்டி கொடுக்க தொடங்கினார்கள்.

தங்கள் தலைவியின் மரணத்தை வைத்து அரசியல் ஆதாயம், பதவிபேரம் நடத்தியவர்கள் வக்கிர புத்தியுடன் தலைவர் கருணாநிதி உடல்நிலை பற்றி ஒரு வதந்தியை பரப்பினார்கள்.

ஆட்சியாளர்களோ, அவர்களுக்கு துணை போகும் அதிகாரிகளோ, எப்படி திசை திருப்பினாலும் தமிழக மக்கள் ஏமாளிகள் அல்ல. ஒருமுறை ஏமாந்தது போதும். இனியொரு முறை ஏமாந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

ஒக்டோபர் 4ஆம் திகதி சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் வழக்கில் இந்த அரசின் தலைவிதி நிர்ணயிக்கப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிறையவே இருக்கிறது. அன்றைய தினம் அனிதாவின் தியாகத்திற்கு உரிய விடை கிடைக்கும்.

அந்த விடை தமிழகத்தில் எதிர்காலத்தில் எந்த மாணவரின் வைத்தியர் கனவும் சிதைக்கப்படாமல் பாதுகாக்கும். மாநில உரிமையை அடகு வைத்து மண்டியிட்டு கிடப்போர் கோட்டையில் இருந்து தூக்கி வீசப்படுவார்கள். சமூக நீதிக்காகவும், கிராம மாணவர்களின் எதிர்காலத்திற்காகவும், கல்வியை மாநில பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதற்காகவும் அனிதா செய்த தியாகம் மாணவர் சமுதாயத்தை வாழ வைக்கும் என்று அவர் தெரிவித்தார். (3-8)

# சோமாலிய இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்-17 பேர் பலி!

சோமாலியா நாட்டின் தலைநகர் மோகாடிஷு அருகே தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டு மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 17 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.



சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா ஆதரவு பெற்ற உள்நாட்டு தீவிரவாதிகளான அல் ஷபாப் குழுக்கள் ஏராளமாக இயங்கி வருகின்றன. சோமாலியா அரசை கவிழ்த்துவிட்டு மிகவும் கண்டிப்பு நிறைந்த இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலான ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது இவர்களின் நோக்கமாகவுள்ளது.

உள்நாட்டு இராணுவ வீரர்கள் மீது அவ்வப்போது அதிரடியாக தாக்குதல் நடத்திவரும் இந்த தீவிரவாதிகள் மத்திய ஆபிரிக்காவில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுவரும் சர்வதேச அமைதிப் படையினரையும் கொன்று குவிக்கின்றனர்.

இந்நிலையில், சோமாலியா நாட்டின் தலைநகர் மோகாடிஷு நகரின் புறநகர்ப் பகுதியான பரிரே என்ற இடத்தில் உள்ள இராணுவ முகாமின் மீது நேற்று அதிகாலை அல் ஷபாப் தீவிரவாதிகள் இரண்டு கார்க்குண்டுகளால் தாக்குதல் நடத்தினர். பின்னர் மேலும் பல தீவிரவாதிகள் அங்கிருந்த இராணுவ வீரர்கள் மீது துப்பாக்கிகளால் சுட்டனர். இராணுவ வீரர்களும் எதிர் தாக்குதல் நடத்தினர். இந்த மோதலில் 17 இராணுவ வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். (3-8)

# 'ஒபாமா கேர்' காப்பீட்டு திட்டத்தை இரத்துச்செய்வதில் ட்ரம்ப் தீவிரம்

'ஒபாமா கேர்' காப்பீட்டு திட்டத்தை இரத்துச் செய்து விட்டு அதற்கு மாற்றுத் திட்டத்தை கொண்டு வருவதற்கு நிர்வாக உத்தரவு பிறப்பிப்பதில் ட்ரம்ப் தீவிரமாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா ஆட்சிக் காலத்தில், ஏழை எளிய மக்களும் மருத்துவ காப்பீடு செய்து கொள்ள வசதியாக குறைந்த பிரிமியத்தில் 'ஒபாமா கேர்' என்ற பெயரில் ஒரு காப்பீட்டுத் திட்டத்தை கொண்டு வந்தார். இதன் மூலம் 2 கோடி அமெரிக்கர்கள் பலன் அடைந்து வருகின்றனர்.

இத் திட்டத்தை இரத்துச் செய்வதில் அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் உடும்பு பிடியாக உள்ளார். ஆனால் இதற்கு அவரது குடியரசு கட்சியிலேயே போதிய வரவேற்பு இல்லை.

இத் திட்டத்தை இரத்து செய்து விட்டு மாற்றுத் திட்டத்தை கொண்டு வர அவர் மேற்கொண்ட கடைசி முயற்சி, கடந்த செவ்வாய்க்கிழமையன்று பாராளுமன்ற செனட் சபையில் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில் 'ஒபாமா கேர்' காப்பீட்டுத் திட்டத்தை இரத்து செய்து விட்டு அதற்கு மாற்று திட் டத்தை கொண்டு வருவதற்கு நிர் வாக உத்தரவு பிறப்பிப்பதில் தீவிர மாக உள்ளார். இது தொடர்பாக அவர் பரிசீலனை செய்து வரு கிறார்.

இதுபற்றி ட்ரம்ப் கூறுகையில், "நிர்வாக உத்தரவு பிறப்பிக்க பரிசீலித்து வருகிறேன். மேலும், 2018ஆம் ஆண்டு தொடக்க மாதங்களில் பாராளுமன்றத்தில் சுகாதார காப்பீட்டு திட்ட விவகாரம் மீண்டும் வரும். இது தொடர்பாக ஜனநாயக கட்சியினருடன் பேசுவேன். அதன் பின்னர் தேவையான வாக்குகள் கிடைத்து விடும்" என்று குறிப்பிட்டார். (3-8)

# ரோஹிஞ்யா அகதிகள் மீது தாக்குதல் நல்லிணக்கத்தை குழப்பும் முயற்சி

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ரோஹிஞ்யா அகதிகள் தொடர்பான பிரச்சினையை பயன்படுத்தி எமது நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை குழப்ப சில நபர்களும் குழுக்களும் முயற்சி செய்வதாக சட்டம் ஒழுங்கு அமைச்சு குற்றம் சாட்டியுள்ளது. குழப்பம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் மூன்று குழுக்கள் விசாரணை நடத்துவதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டவரையறைகளுக்கு அமையவே அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கல்கிஸையில் ரோஹிஞ்யா அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த வீட்டிற்கு முன்பாக குழப்பம் விளைவித்த பிக்குமார் அடங்கலான சந்தேகநபர்களை கைது செய்யுமாறு கல்கிஸை நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. ரோஹிஞ்யா அகதிகளுக்கு எதிராக கல்கிஸையில் இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சு இந்த தாக்குதல் குறித்து கவலை தெரிவித்துள்ளது.

ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்திடம் கையளிக்கப்பட்ட அகதிகள் இரத்மலானையில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இங்கு சட்டவிரோதமாக சிலர் நடந்து கொண்ட விதம் குறித்து கவலையடைகிறோம். இந்த சம்பவத்தில் 3 பொலிஸார் காயமடைந்தார்கள். இதனையடுத்து அகதிகள், ஐ.நா அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் கோரிக்கைக்கமைய பூசா தடுப்பு முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்த நிலையில் கைதான ரோஹிஞ்யா அகதிகள் தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட வரையறைகள் மற்றும் முறைமைகளுக்கு அமையவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 30 ரோஹிஞ்யா அகதிகளும் குடிவரவு குடியகல்வு சட்டத்திற்கு அமையவே இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

4 வருடங்கள் இந்தியாவில் அகதிகளாக இருந்த பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் சட்டவிரோதமாக இவர்கள் இலங்கை கடற்பரப்பிற்கு வந்திருந்தார்கள். இவர்கள் கடற்படையினரால் கைதாகி யாழ்.மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் சிறைக்கு அனுப்பப்பட்டனர். சிறைச்சாலை திணைக்களம் இவர்களை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினூடாக மிரிஹான முகாமில் தடுத்து வைத்திருந்தது.

மல்லாகம் நீதிமன்றம் இவர்கள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றதற்கமைய கடந்த ஓகஸ்ட் மாதம் ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்திடம் கையளிக்கப்பட்டார்கள். இவர்கள் விரைவில் ஐ.நா.அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தினூடாக வேறு நாட்டுக்கு அனுப்பப்பட உள்ளனர்.. இதற்கு முன்னரும் ரோஹிஞ்யா அகதிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இவ்வாறு 2008 இல் வந்தவர்கள் 2012 இலும் 2013 இல் வந்தவர்கள் 2015 இல் வேறு நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ரோஹிஞ்யா அகதிகள் தொடர்பில் இடம்பெற்ற குழப்ப நிலை தொடர்பாக கல்கிஸை பொலிஸார் கல்கிஸை நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் 3 பொலிஸ் குழுக்கள் விசாரணை நடத்தி வருகின்றன. இதற்கு முன்னர் ரோஹிஞ்யா அகதிகள் இலங்கைக்கு வந்த போது எந்த அமைப்பும் எதிர்ப்புப் போராட்டம் நடத்தவில்லை. ஆனால் சில அரசியல் ரீதியான அமைப்புகள் அரசியல் இலாபத்திற்காக இவ்வாறு நடந்துள்ளன.

அகதிகள் தொடர்பான அரசாங்கத்தில் கொள்கையில் எந்த மாற்றமும் இடம் பெறவில்லை. எந்த அகதிக்கும் இங்கு பிரஜாவுரிமை வழங்கவோ தொடர்ந்து தங்க வைக்கவோ விசா வழங்க முடிவு செய்யப்படவில்லை. சில நபர்களும் அமைப்புகளும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை குழப்புவதற்கு மேற்கொள்ளும் இவ்வாறான பொய் செயற்பாடுகள் குறித்து மக்கள் அவதானமாக இருக்குமாறு கோருகிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்கிஸை பகுதியில் குழப்பம் விளைவித்த பிக்குமார்கள் அடங்கலான சந்தேகநபர்களை கைது செய்வதற்கு கல்கிஸை நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது. கல்கிஸை வீடொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த ரோஹிஞ்யா அகதிகளை வெளியேற்றுமாறு கோரி சில பௌத்த அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு கட்டடத்தையும் தாக்கி சேதப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மண்வள பாதுகாப்பு சட்டத்தை வினைத்திறனாக மாற்றுங்கள்

## ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை



இயற்கை அனர்த்தங்களின் போதும், பல்வேறு மோசடிகளினாலும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் மண்ணரிப்பை தடுத்து மண்வளத்தை பாதுகாப்பதற்காக மண்வள பாதுகாப்பு சட்டத்தை வினைத்திறனாக அமுல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்ற மண்வளம்பேணல் சபை அலுவலர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அனுமதியற்ற மணல் மற்றும் மண் கடத்தல் காரணமாக கங்கைகள் மற்றும் ஆற்றங்கரைகளில் ஏற்படும் மண்ணரிப்பு காரணமாக நீர்மூலங்கள் தடைப்பட்டுள்ள மோசமான நிலை தொடர்பிலும் அலுவலர்களின் கவனத்தை ஈர்த்த ஜனாதிபதி அந்த நிலையை தவிர்ப்பதற்காக சட்டத்தை பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணங்களின் போது மலைகளில் ஏற்படும் மண்சரிவை தவிர்ப்பதற்காக பாவிக்கப்படும் தொழில் நுட்பத்திலுள்ள குறைபாடுகளை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். அது தொடர்பான எதிர்கால திட்டமிடலின் போது மண்ணரிப்பை தடுப்பதற்கு முதன்மை கவனம் செலுத்தி திட்டங்களை அமுல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டார்.

மத்திய மலைநாட்டில் மட்டுமன்றி நாடு முழுவதும் மண்ணரிப்பை தடுப்பதற்கான திட்டங்களை வினைத்திறனாக அமுல்படுத்துமாறும், சட்ட அதிகாரங்களை மாவட்ட செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான சுற்றறிக்கைகளை அனுப்புமாறும், அடுத்த மாதம் 06 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் தேசிய உணவுற்பத்தி மறுமலர்ச்சி திட்டத்தோடு இணைந்ததாக மண்ணரிப்பை தடுப்பதற்காகவும் தெளிவுபடுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி, அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். (இ-3)

# வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றக்கூடாது

## கம்மன்பில போர்க்கொடி

வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றக்கூடாது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரலாற்றில் நாட்டுக்கு எதிராக இடம்பெற்றுள்ள ஆக்கிரமிப்புகளில் ஒன்றைத் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆக்கிரமிப்புக்களும் வடக்கிலிருந்தே இடம்பெற்றுள்ளன. போரின் பின்னரும் வடக்கிலிருந்தே சட்டவிரோதப் பொருட்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. எனவே வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றக்கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேர் மறுவாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். அவர்கள் இன்னும் வடக்கிலேயே உள்ளனர். இவ்வாறான நெருக்கடிகள் இருக்கும் போது இராணுவத்தை வடக்கில் நிலைபெறச் செய்ய வேண்டும். அதனை விடுத்து தெற்கில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை.

நாட்டின் பாதுகாப்பை அதிகரிப்பது எனத் தெரிவிப்பது அதிகளவில் நிதி செலவிடுவதை குறிப்பதல்ல. மாறாக பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்பதேயாகும். அரசு தற்போது இராணுவத்தினரைப் பலவீனப்படுத்தும் வேலைத்திட்டங்களையே மேற்கொள்கிறது.

வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படுகின்றன. இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யாது அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதனால் இராணுவத்தினர் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களை இரவு வேளையில் காலம் தாழ்த்தாது மூடுக

## அழகக சம்மேளனம் அறிவிப்பு

வடமாகாணத்தில் உள்ள அழகக நிலையங்கள் (சிகை அலங்கரிப்பு நிலையங்கள்) இரவு 9 மணியுடன் தமது சேவைகளை நிறுத்துமாறு வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது. அவ்வாறு குறித்த நேரத்தின் பின்னர் சேவையில் ஈடுபடும் நிலையங்கள் தொடர்பாக பொலிஸாரினால் முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளுக்கு தாம் ஒத்துழைப்பதாகவும் தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில்,

வடமாகாணத்தில் தற்போது இடம்பெறும் கஞ்சா கடத்தல், வன்முறை போன்ற சம்பவங்களுக்கு ஏதுவாக அழகக நிலையங்கள் இரவு 9 மணிக்கு பின்னர் திறந்திருப்பதும் ஒரு காரணமாக உள்ளது. அதாவது இரவு நேரங்களில் அங்கு பலர் தங்கி இருப்பதாகவும் அதற்கான காரணம் என்ன எனவும் அதன் விபரங்களை தருமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

அழகக நிலைய உரிமையாளாகள் தமிழ் கலாசாரத்தை மதிப்பவர்கள். அவர்களை இவ்வாறு குறிப்பிடுவதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

எனினும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் சிலர் காலம் தாழ்த்தி தமது நிலையங்களை மூடுவதாக முறைப்பாடு எமக்கு கிடைத்துள்ளது. எனவே எமது சங்க உறுப்பினர்களுடன் இது தொடர்பாக கலந்துரையாடி முடிவெடுத்துள்ளோம். அதாவது இனிவரும் காலங்களில் 9 மணிக்கு பின்னர் அழகக நிலையங்களில் ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அதற்கு சம்மேளனம் எந்தப் பொறுப்பும் ஏற்க மாட்டாது.

எனவே இதற்கு எமது தொழிலாளர்களும் பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்குவதுடன், நேரக் கட்டுப்பாட்டை மீறி தொழிற்படும் சங்கங்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுப்பதற்கு எமது சங்கம் ஒத்துழைக்கும் என தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9-60)

# ஒக்டோபர் புரட்சியும் உலக இலக்கியமும்

## ஆய்வரங்கத் தொடர்

ஒக்டோபர் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக (1917 - 2017) தேசிய கலை இலக்கியப் பேரவையினால் நடத்தப்படும் கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் 6 ஆவது அமர்வு ஒக்டோபர் புரட்சியும் உலக இலக்கியமும் எனும் தலைப்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பிரபல எழுத்தாளர் ஐ. சாந்தன் தலைமையில் இடம் பெறவுள்ள இவ் ஆய்வரங்கில் ஆய்வுரையினைப் பேராசிரியர் சி. சிவசேகரம் வழங்குவார். இவ் ஆய்வுரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம் பெறும். கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இவ் ஆய்வரங்கில் கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## மேடை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாணிக்கவாசகர் வித்தியாலய மேடை திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.20 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் கலந்து கொள்வார். (இ-3-60)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டு. கார்த்திகேய வித்தியாலயத்தின் வாணி விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் செல்வி.சி. கஜீபா தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்வில் ஆசியுரையினை உடுக்கியவளை பிள்ளையார் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ ந.பிரசாந்த சர்மா வழங்குவார். (இ-3)

# வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் தேர்த்திருவிழா சிறப்பு மலர்




World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2017

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

BSc (Hons) SOFTWARE ENGINEERING

UGC RECOGNIZED

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications

Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L|O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk





Study Engineering with The Leader

Apply now for New Intake 2017

EQAA

HND IN CIVIL ENGINEERING

Entry Qualifications
- G.C.E. A/L or G.C.E. O/L + Engineering Foundation

Duration • 2 Years

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

UGC RECOGNIZED

ice

Entry Qualifications
- Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector





World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA

Apply now for New Intake 2017

ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC RECOGNIZED

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk

C-9802



Professional Diploma in QUANTITY SURVEYING



Apply now for New Intake 2017

Entry Criteria:
- NDT(Civil)
- NDES(Civil)
- HNDE(Civil)
- ARICS (non QS)
- ICIOB(non QS)
- ACIOB
- Ad. Dip(PM)NIBM, NCT, NDQS, ACTA QS (NVQ Level 5) (OUSL) Dip Civil with Relevant Working Experience/ Any other qualification equivalent to IVQ Level 5 and acceptable to the University

PD QS PROFESSIONAL DIPLOMA IN QUANTITY SURVEYING

MSc QS or MSc Construction Project Management RICS

BSc (Hons) Quantity Surveying RICS

BIRMINGHAM CITY University

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk

EQAA

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk

# ...ப் பெருமாள் தேவஸ்தானம்
## ...ர் - 30.09.2017





## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
## OCTOBER மாதத்திற்கான

**Professional IT Courses**

- Dip.in Information Technology
- Diploma in Office Automation
- Dip. in Pre-Press Desktop Publicating
- Diploma in Pc Applications
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Dip.in Auto CAD
- JAVA, C#, VB.net,
- C++,
- php

**புதிய பிரிவுகள்**

- 2/10/2017 9:30 a.m. or 3:30 p.m.
- 9/10/2017 9:30 a.m. or 3:30 p.m.

**CERTIFICATE IN SPOKEN SINHALA**

LEVEL 01 Duration 3 Months ,LEVEL 02 Duration 3 Months

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள் ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

உயர்தரத்தின் பின் பட்டப்படிப்போ வேறு உயர்கல்வியோ அல்லது உயர்வேலைவாய்ப்பை பெற்று வாழ்வில் வெற்றிபெற ஆங்கிலக்கல்வி இன்றியமையாததாகும். இதனை கருத்திற் கொண்டு, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு டிப்ளோமா ஆங்கிலக்கற்கைநெறியை DMI வழங்குகின்றது.



## DIPLOMA IN ENGLISH
## Spoken English

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat, Sun 10.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m<br>Sat, Sun 3.30 p.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun 10.00a.m |

**Experts in English Training**

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்

**IELTS** | IELTS Life Skills (A1,B1) திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு 100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**DMI COMPUTER EDUCATION**

# DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி சயன்ஸ் ஹோல் அருகாமை | M.M.V.வீதி (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) | No.174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No.130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |



# கிருபா லேணர்ஸ்
## சாரதி பயிற்சிப் பாடசாலை

KIRUBA LEARNERS Reg - DS 589

# KIRUBAA LEARNERS



தலைமை காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

L LEARNER DRIVER

Hotline - 0777 225292
071 4546960




021 - 222 - 4353
021 - 492 - 3200

யாழ்ப்பாணம் :
021 492 3201
071 454 6958
021 300 6550
071 454 6957
021 224 2022
071 454 6958
021 492 3202
021 227 0700

கிளிநொச்சி :
A9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505 071 454 6955
முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515 071 454 6955
021 320 1818 071 454 6955
மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544 071 454 6955

மன்னார் :
071 986 7699
077 647 2732

வவுனியா :
216, A9 வீதி, வவுனியா.
021 222 7777
071 454 6953



# DEMAK





## CIVIC 110F

~~விசேட விலை ரூ.199,900/-~~

ரூ.184,900/-

ரூ.15,000/-
விலைக் கழிவு



• நிபந்தனைகளுக்கு உட்பட்டது

முதல் முறை ஓட்டிச்செல்பவருக்கு பொருத்தமான ஸ்கூட்டர்

மலேசியாவின் அதி சிறந்த தயாரிப்பு

விரையுங்கள்
இக்கொடுப்பனவு குறுகிய காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்

பிரதீப் - 077 277 1198

டிமாக் சேல்ஸ் அன்ட் சர்விஸஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட்
(மலேசியாவின் டிமாக் கூட்டு நிறுவனத்தின் அங்கத்தவர்) 199, வொக்சோல் வீதி, கொழும்பு 02
துரித அழைப்பு 011 7 711 211 சேவைக்கான அழைப்பு — 077 7380 700
Email : enquiry@demakmotor.lk web : www.demakmotor.lk

Island wide Sales Service Spare parts

LEASING லீசிங்

இலவசம்

ரூ. 30,000

உத்தரவாதம்

## வெளிச்ச வீட்டுடன் இடிதாங்கி வேண்டும்

# குருநகர் மீனவர்களின் கோரிக்கைக்கு எந்தவித நடவடிக்கையும் இல்லை

குருநகர் முகத்துவாரத்தில் வெளிச்ச வீட்டுடன் கூடிய இடிதாங்கி அமைத்தல் தொடர்பாக குருநகர் ஐக்கிய முன்னணியினரால் கடந்த ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல மகஜர்கள் கொடுக்கப்பட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மீனவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குருநகர் முகத்துவாரப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வெளிச்ச வீட்டுடன் கூடிய இடிதாங்கி கடந்த யுத்தகாலப் பகுதியில் சேதமாக்கப்பட்டது.

இற்றைக்கு 15 ஆண்டுகள் கடந்த நிலையில் குருநகர் முகத்துவாரப் பகுதியில் ஏற்பட்ட இடி மின்னல் தாக்கத்திற்குள்ளாகி இதுவரை ஏழு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர்.

குருநகர்ப்பகுதி மக்கள் வாழ்வாதார தொழிலாக மீன்பிடித் தொழிலை செய்து வருகின்றனர். எனவே மழைகாலம் ஆரம்பமாகியிருப்பதால் கடற்றொழிலுக்கு செல்லும் மீனவர்கள் பெரும் அச்ச நிலையில் தொழிலுக்கு செல்வதாகவும் முகத்துவாரத்தில் வெளிச்ச வீட்டுடன் கூடிய இடிதாங்கியை மீள அமைப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-106)

## இடைக்கால அறிக்கையில்

# அதிகாரப்பகிர்வு இல்லை

### இராஜாங்க அமைச்சர் இராதா கவலை

(யாழ்ப்பாணம்)

அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமெனக் கோரியே இங்கு போராட்டம் நடைபெற்றது. ஆனால் தற்போது வந்திருக்கின்ற இடைக்கால அறிக்கையில் அதிகாரம் முழுமையாகப் பகிரப்படவில்லை. ஆகவே அந்த அறிக்கை குறித்து மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் யாழில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பின் போது இடைக்கால அறிக்கை தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்க இடைக்கால அறிக்கையில் பல பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பில் மீளவும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

குறிப்பாக மாகாணங்களுக்குரிய அதிகாரம் முழுமையாக இல்லை. அதிகாரப் பகிர்வு முழுமையாக கிடைக்க வேண்டும்.

இந்த அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அதிகாரங்கள் முழுமையாக வேண்டுமென்றுதான் போராட்டமே நடைபெற்றது.

ஆனாலும் அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்படாமலே வந்திருக்கின்ற இடைக்கால அறிக்கை குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)



புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் யோக பாடசாலையில் யோகாசனப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் இளைப்பாறிய அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம், வைத்தியகலாநிதி திருமதி முல்லை பரமேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வரணியில் பல போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசியவாசிப்பு மாதத்தை முன்னிட்டு வரணிப் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கட்டுரை, கவிதை, சிறுகதை, பொது அறிவு மற்றும் ஓவியப் போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை வரணி பொதுநூலகத்தில் இடம்பெறும் என பொது நூலகர் எஸ்.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ-10-102)

# தமிழ்ச்சங்கம் நடத்தும் தொடர் சொற்பொழிவு

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்தும் தொடர் சொற்பொழிவு நிகழ்வு எதிர்வரும் 05, 06, 07ஆம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத் தொடர் சொற்பொழிவினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் "நா. ஞானகுமாரன்" நிகழ்த்தவுள்ளார். (இ-3)

# இலஞ்சம் கோரிய மதுவரி அதிகாரி விளக்கமறியலில்

கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ஒருவரைக் கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாது இருப்பதற்கு இலஞ்சம் பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட அழுத்கம மதுவரித் திணைக்கள அதிகாரியை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நபரிடம் 50,000 ரூபா பணம் இலஞ்சம் கோரியதாகவும் குறித்த நபர் முதலில் 20,000 ரூபா வழங்கியதாகவும் மீதித் தொகையினை வழங்க முற்பட்ட வேளையிலே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க முன்னிலையில் நிறுத்தப்பட்ட போது இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கற்கைநெறி பட்டமளிப்பு விழாவும் தமிழ்நிதி விருதுவழங்கல் நிகழ்வும்

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் 2016 - 2017க்கான தமிழ்ப்பட்டயக் கற்கை நெறி பட்டமளிப்பு விழாவும், தமிழ்நிதி விருதுவழங்கல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கப் புலமைக்குழுத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் செ.யோகராசா கலந்து கொள்ளவுள்ளார். தமிழ்நிதி விருதினை அறிஞர் "தாமரைத் தீவான்" பெற்றுக் கொள்வார். (இ-7)

# அமெரிக்கா - சீனா இடையே விரைவில் யுத்தம் வெடிக்கும்

## திஸ்ஸ விதாரண எச்சரிக்கை



மிக விரைவில் அமெரிக்கா-சீனா யுத்தம் தோன்றும் நிலை காணப்படுகின்றது. அவ்வாறான நிலையில் இலங்கையும் அதில் தொடர்புபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண எச்சரித்துள்ளார். கொழும்பில் கூட்டு எதிர்க்கட்சியின் சார்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

அமெரிக்காவின் அழுத்தம் காரணமாகவே இலங்கையின் பாதுகாப்புச் செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் இந்த அரசாங்கம் திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்காவுக்கு கையளிக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளது. அதன் பின்னர் இந்துமா சமுத்திரப் பகுதியில் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கும். அதற்கு ஒத்தாசை வழங்கும் வகையிலேயே இலங்கையின் பாதுகாப்புச் செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினருக்கான பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வகுப்பு ஆரம்பம்

பிரதி சனிக்கிழமைகளில் சின்மயா கனிஷ்ட யுவகேந்திராவினருக்கான (13 - 16) புதிய வகுப்பு பிற்பகல் ஒரு மணி முதல் 2.00 மணி வரை யாழ்.சின்மயாமிஷன், இல. 09, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது. (இ-3)

# கிழக்கில் மூவர் மகிந்த பக்கம்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பிரநிதிநிதித்துவப்படுத்திய கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மூவர் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியுடன் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் நடந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் இதனை அறிவித்துள்ளனர்.

சந்திர தெவரப்பெரும, ரி.எம். ஜயசேன மற்றும் டபிள்யூ.டீ. வீரசிங்க ஆகியோரே இவ்வாறு இணைந்து கொண்டுள்ளனர். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இன்று வடக்கில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திரு நெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 220 | 180 | 140 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 95 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 300 | 280 | 300 | 320 |
| தக்காளி | 150 | 160 | 100 | 120 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 | 40 | 80 | 60 | 60 |
| கோவா | 140 | 160 | 80 | 140 | 160 | 140 |
| கரட் | 120 | 200 | 90 | 200 | 160 | 100 |
| பூசணி | 60 | 40 | 30 | 40 | 60 | 40 |
| புடோல் | 100 | 120 | 60 | 100 | 100 | 90 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 80 | 120 | 90 |
| சின்ன வெங்காயம் | 230 | 220-250 | 200 | 250 | 280 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 100-160 | 75 | 100 | 120 | 140 |
| பாகற்காய் | 280 | 500 | 230 | 240 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 60 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 80 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 160 | 100 | 60 | 120 | 180 |
| லீக்ஸ் | 140 | 250 | 140 | 150 | 160 | 140 |
| பீற்றூட் | 50 | 50 | 30 | 160 | 80 | 40 |
| கறிமிளகாய் | 180 | 300 | 200 | 140 | 240 | 170 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 130 | 160 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 250 | 140 | 200 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 130 | 120 | 160 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 20 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 260 | 200 | 200 | 300 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-100 | 70 | 75 | 60-100 | 90 |
| இராசவள்ளி | 280 | 500 | 250 | 140 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 120 | – | 200 | 200 |
| முள்ளங்கி | 70 | 100 | 25 | 120 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 07 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 60 | 60 | 25 | 80 | 60 | 80 |

நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதே நம்மவர் களையும் முன்னேறச் செய்ய சிறந்த வழி.

~ ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சைவத் துறவற சபை உருவாக்கப்பட வேண்டும்

சமணத்தின் திருத்திய வடிவம்தான் பௌத்தம். சமணத்துறவிகள் மிகக் கடுமையான நிபந்தனைகளை கொண்டிருந்ததால், அந்தச் சமயம் தன்னிலை இழக்க வேண்டியதாயிற்று.

சூரிய அஸ்தமனத்தின் பின்னர் ஆகாரம் உண்பதில்லை; மழை காலங்களில் மண்ணில் உள்ள பூச்சி புழுக்கள் காலில் மிதிபட்டு இறந்துவிடும் என்பதால்,

அக்காலங்களில் பயணம் செய்வதில்லை. நிலத்துக்குக் கீழ் விளைந்த கிழங்கு வகைகளை உண்பதில்லை என ஏகப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடித்தமையால் சமண சமயம் பெருமளவுக்கு வழக்கொழிந்து போயிற்று.

எனினும் தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் சமணக் கோவில்கள் உண்டு என்பதையும் கூறித்தானாக வேண்டும்.

சமணத் துறவிகள் உயிர்க் கொல்லாமையிலும் பாவம் செய்யாமையிலும் இறுக்கமாக இருந்ததால் அது நடைமுறைக்கு சாத்தியமற்றதாயிற்று. இந்நிலையில்தான் பௌத்தம் தோற்றம் பெறுகிறது.

பௌத்த துறவு சமணத்துறவில் இருந்து இலகுபடுத்தப்படுகிறது. நடைமுறைக்கு ஏற்றால்போல் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

எனினும் சமண சமயம் கூறிய கொல்லாமை, பாவம் செய்யாமை என்ற அறத்தைப் பின்பற்றுதல் என்பது வலியுறுத்தப்பட்டது.

இருந்தும் பௌத்த துறவிகள் கௌதம புத்தபிரான் போதித்த போதனைகளைப் பின்பற்றுவதிலிருந்து விலகிச் செல்வதற்குத் தயாராகினர்.

பௌத்த மதத்தை இலங்கையில் நிலைநிறுத்த வேண்டும் என முடிவு செய்தனர். இதற்காக பௌத்த துறவுக்காகப் பிள்ளைகளைப் பெற்றோர் அனுப்புவது புத்தபிரானுக்குச் செய்யும் நன்றி என வலியுறுத்தினர்.

கூடவே அரசாங்கத்தை ஆளுகை செய்கின்ற அமைப்பாக பௌத்த பீடங்கள் தங்களை வலுப்படுத்திக் கொண்டன.

பௌத்த துறவிகளை பயிற்றுவிக்க பிரிவேனா பாடசாலைகள் அரச செலவில் செயற்படுகின்றன.

இல்வாழ்வு என்பதைத் துறந்து பௌத்தத்தைக் காப்பாற்றுதல் என்பதற்காக வருடந்தோறும் ஆயிரக்கணக்கான பௌத்த சிங்களப் பிள்ளைகள் பிரிவேனாவில் இணைந்து கற்று பௌத்த துறவிகளாகி இலங்கை பௌத்த சிங்கள நாடு எனப் பிரசாரம் செய்கின்றனர்.

இதைக் கூறும்போது அட, பௌத்த துறவிகளின் வரலாற்றுத் தொடர் இவ்விடத்தில் எழுதப்படுகிறதோ என்று நீங்கள் நினைக்கலாம். அப்படியொரு நினைப்புக்காக இது எழுதப்படவில்லை.

மாறாக சிவபூமி என்று போற்றப்படும் இலங்கையில் சைவ சமயம் நிலைபெற வேண்டுமாக இருந்தால்,

சைவ சமயத்தில் துறவற சபைகளையும் அதற்கான ஆச்சிரமப் பாடசாலைகளும் உருவாக வேண்டும்.

இவ்வாறு உருவாக்கப்படும் சைவத்துறவிகள் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று சமய போதனையும் சமுதாயப் பணியும் அரசியலை வழிப்படுத்தும் பிரசாரங்களும் செய்தல் அவசியம்.

இவ்வாறு செய்தால் மட்டுமே இலங்கையில் சைவ சமயத்தைக் காப்பாற்ற முடியும். நடக்குமா?

# விசேட நீதிமன்றத்தை விரைவில் அமையுங்கள்

## வித்தியாவிற்கு நீதி கிடைத்த பின்னர் ஜனாதிபதியிடம் ஜே.வி.பி.கோரிக்கை

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை வரவேற்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வித்தியா படுகொலை செய்யப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு விசேட நீதிமன்றத்தை அமைக்கவிருப்பதாக உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில், அந்த உறுதிமொழியை ஜனாதிபதி விரைவில் நிறைவேற்ற வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

"வித்தியாவின் குடும்பத்திற்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக பலரும்பாடுபட்டுள்ளனர். இதனை போன்று பாதிக்கப்படும் பலருக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

இலங்கையில் நாளொன்றுக்கு 13 சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இவர்களில் ஓர் இருவர் உயிரிழக்கவும் செய்கின்றனர்.

வித்தியா படுகொலை செய்யப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு விசேட நீதிமன்றை அமைக்கவிருப்பதாக உறுதியளித்திருந்தார்.

இந்த உறுதிமொழியை ஜனாதிபதி விரைவில் நிறைவேற்ற வேண்டும். நீதி அமைச்சராக பெண் ஒருவர் பதவியேற்றுள்ள நிலையில் அரசாங்கம் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வித்தியாவுக்கு 2 வருடங்களில் நீதி ஏனைய வழக்குகள் ஏன் தாமதம்?

### பிரதியமைச்சர் பெரேரா கேள்வி

(கொழும்பு)

வித்தியா கொலை வழக்கு இரண்டு வருடங்களில் நிறைவடைந்ததைப் போல் ஏனைய வழக்குகளை ஏன் விரைவாக நடத்த முடியாது என பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

பாரிய குற்றங்கள் நடைபெற்று மேன்முறையீடு வரை செல்ல 17 வருடங்களும் 2மாதங்களும்தேவைபடுகின்றன. சட்டமா அதிபர் திணைக்களம் இது குறித்து ஆராய்ந்துள்ளது.

எனினும் மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கு இரண்டு வருடங்களில் நிறைவடைந்துள்ளது.

குற்றவாளிகளான 7 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், இருவர் விடுதலை செய் யப்பட்டுள்ளனர். இதுதான் சட்டம். சரியான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய வழக்குகளையும் ஏன் இதுபோன்று விரைவாக நடத்த முடியாது என மக்கள் கேள்வி எழுப்புவதாக பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிறிபாதவை கொலை செய்த வழக்கு, சுனிலை கொலை செய்த வழக்கு, கோடிக்கணக்கில் பணத்தை கொள்ளையடித்தவர்களின் வழக்கு, மற்றும் மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடிகள் குறித்த வழக்கை ஏன் இவ்வாறு விசாரணை செய்ய முடியாது? எனவும் பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

## இறுதியாண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியா தொழில்நுட்பக்கல்லூரியின் 2017 ஆம் ஆண்டுக்கான டிசம்பர் மாத இறுதியாண்டு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்படிவத்தினை அலுவலக நாட்களில பெற்று 08.10.2017 ஆம் திகதிக்கு முன்பாக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ் மொழி மூலம் குடிசார் மின் மற்றும் இலத்திரனியல் கணிய அளவையியல் பயின்ற மாணவர்களுக்கு இவ் ஆணடு டிசம்பர் மாதம் நடைபெறும் பரீட்சையே இறுதிச் சந்தர்ப்பம் என்பதனால் இது வரை பரீட்சைக்கு தோற்றி சித்தியடையாத மாணவர்கள் உடன் மீள் பரீட்சைக்கு தோற்றுமாறு கோரப்பட்டுள்ளது. (மு-250)

## நவராத்திரி பாமாலை

இன்று விஜயதசமி



### கல்வி

காலத்தால் அழியாத கலைச்செல்வம்
கலைமகளின் கண்கண்ட அருட்செல்வம்
கல்விக்கு அதிபதியாம் கலைமகளாம்– என்றும்
கைகூப்பி வணங்கி கல்வி பெறுவோம்

ஞாபக சக்தியை நாளெல்லாம் தந்திடுமே
கலைகளைப் பயிலவைத்து காட்டிவிடும்
அறிவுக்கு அறிவுமான அன்புத் தெய்வம்
அன்னையாய் என்றும் அருள்புரிவார்

வனிதராசா மாதுமை
தரம் 06
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல் மாறிவிடும், உங்கள் தோற்றமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.

❖ உடலையும் புலன்களையும் வழிநடத்தும் போது, மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

❖ சிறு சிறு ஆசைகளை அனுபவித்துத்தீர்க்க வேண்டும். பெரிய ஆசைகள் அனைத்தையும் விவேகத்தால் ஆராய்ந்து விட்டுவிட வேண்டும்.

❖ இல்லறத்தில் வாழ்ந்தபடியே காமத்தையும், பணத்தாசையையும் துறந்தவர்கள் பாக்கியசாலிகள்.

❖ மதத்தின் ரகசியம் கொள்கைகளில் இல்லை. செயல்முறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வது தான் மதத்தின் முழுப்பரிமாணமாகும்.

❖ ஒருவன் தன்னை வெறுக்கத் துவங்கிவிட்டால், அவன் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்துவிட்டது என்று பொருள்.

❖ எந்த வேலையாக இருந்தாலும், அதனைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளி. எந்த வேலையும் அற்பமானதல்ல.

# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 30.09.2017













## தனிநாட்டு கோரிக்கை...

அரசியலமைப்பு பேரவையின் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை ஒற்றை ஆட்சியையும் பௌத்தமதத்துக்குரிய முன்னுரிமையும் இல்லாது செய்யப்பட்டுள்ளதாக பௌத்த சாசன செயற்குழு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பில் இலங்கை குடியரசு புத்தமத்திற்கு முன்னுரிமை வழங்கும் என்ற வாக்கியத்தில் இலங்கை குடியரசு என்ற பதத்திற்குப் பதிலாக இலங்கை என்ற பதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இதன்மூலம் புத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள அரச அனுசரணை அகற்றப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

தற்போதைய அரசியல் அமைப்பின் தமிழ் பதிப்பில் **எகிக்கிய நாச்சிய** என்ற சிங்கள பதம் ஒன்றை ஆட்சி என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் புதிய அரசியல் அமைப்பின் யோசனையில் அந்த பதம் ஒருமித்த நாடு என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனூடாக ஐக்கிய சமஷ்டி என்பது அர்த்தப்படுத்தப்படுவதாக மகாநாயக்கர் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் அரசியல் அமைப்பு தொடர்பில் தமிழ் பதிப்பை விட சிங்கள பதிப்பே அதிகார பூர்வமானது என புதிய யோசனையில் குறிப்பிடவில்லை.

மேலும் வடக்கு கிழக்கு இணைப்பு குறித்து இணைப்பு தொடர்பாக வழிநடத்தல் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை பிரிவினை வாதிகள் தனிநாட்டுக் கோரிக்கையும் சட்டபூர்வமாக்கும் முயற்சி என்று மகாநாயக்கர்களை உள்ளடக்கிய பௌத்த சாசன செயற்குழு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மு-11)

## அரசியல் கைதி...

என்ற கைதியே மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவர் நேற்றைய தினம் ஏழாவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

இந்நிலையிலேயே அரசியல் கைதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(மு-11)

## பாதுகாப்பு படை...

ர்பான பொறுப்பு மற்றும் தீர்மானங்களை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமே முன்னெடுத்து வருவதாகவும் விக்னேஸ்வரன் கூறும் வகையில் செயற்பட முடியாது என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன தெரிவித்தார்.

பியகம பிரதேசத்தில் உள்ள வாய்க்கால் புனரமைப்பு செயற்றிட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட ராஜாங்க அமைச்சர், வட மாகாண சபை முதலமைச்சர் பொறுப்பற்ற வகையில் கருத்து வெளியிட்டு வருவதாகவும், அவரின் சில கருத்துக்கள் அடிப்படைவாத முறையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வட பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள படையினர் தொடர்பாக முதலமைச்சர் போலியான ஆவணங்களை தயாரித்து தொடர்ந்து மாற்றி வெளியிட்டு வந்தாலும், கடந்த பல தசாப்தங்களாக யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு பிரிவின் ஊடாக பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை குறைத்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், முதலமைச்சர் கோரும் வகையில் வடக்கில் பாதுகாப்பு படையினரையோ முகாம்களையோ அகற்ற முடியாது என தெரிவித்தார். (மு-11)

## வித்தியா கொலை...

இந்த தாக்குதல் மேற்கொண்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் குறித்த தாக்குதல் சம்பவத்தை தடுத்த சிறைச்சாலை அதிகாரிகள், ஏழு கைதிகளையும் சீ பிரிவு சிறையறையில் அடைத்துள்ளனர்.

பாரிய குற்றச் செயல்களுக்காக மரண தண்டனை மற்றும் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட 350 சிறைக்கைதிகள் தும்பறை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## தமிழர் சார்ந்த...

யில் நல்லிணக்கத்திற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் நழுவிய நிலையில் சர்வதேசத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளின் போது இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டமை போன்ற செயற்பாடுகள் தமிழர்கள் மத்தியில் சீனா தொடர்பில் ஒரு எதிர் மறையான நிலைப்பாடு ஏற்படுவதற்கு காரணமாகியதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் சீனா தற்போது இலங்கையில் தமிழ் அரசியல் தரப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கொள்வதில் ஆர்வமாக உள்ளது. குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் தொடர்புகளை ஏற்டுத்தி கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சியின் வெளிவுறவு பிரிவின் தலைவரான ஜின் ஷின் தெரிவித்தார்.

தமிழர் சார்ந்த விடயங்கள் குறித்து உன்னிப்பாக சீனா அவதானித்து வருகின்றது. போரில் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மக்கள் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது குறித்து சீனா கருத்தில் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (மு-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் தேர்த்திருவிழா சிறப்பு மலர்-30.09.2017

PC PARADISE
கணனி விற்பனையும், திருத்துதலும்
இல. 401 1/2 , மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-0776305290

CNR World Wide Express
0772931062

பலசரக்கு பொருட்கள் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்
சிவலக்சுமி ரேடர்ஸ்
இல.131 டி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் தேர்த்திருவிழா
சிறப்பு மலர்-30.09.2017
திருமண வைபவங்கள், பிறந்தநாள் நிகழ்வுகள், பண்டிகை நிகழ்வுகள் அனைத்திற்கும் கேக் தயாரிப்பதற்கான எல்லாப் பொருட்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்பு எசன்ஸ் ஹவுஸ்
133/7 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021 222 8463


வாழும் கலை அமைப்பு வழங்கும்
"உபநயனம்"

யாழ்ப்பாணத்தில்
- உன்னதமான "பிரம்ம உபதேசம்"
- குருவின் அருளால் பெறும் "காயத்திரி மந்திரம்" உபதேசம்
- தீயவை போக்கும் "அக்னி கோத்ரா" யாகம், சந்தியா வந்தனம்
- தியானம், யோகா மற்றும் வேத ஆகமங்களின் சொற்பொழிவு
- ஆன்மீக பாதையில் ஓர் புதிய பிறப்பு

■ இப் பயிற்சி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருதேவ் அவர்களின் சீடர் ஸ்ரீ காசிஜி அவர்களினால் நடத்தப்படும்.
■ தனிப்பட்ட ரீதியாகவும், அமைப்புகளின் ஊடாகவும் பங்குபெறலாம்
■ செப்பிலான தாமரைக் கிண்ணம் மற்றும் அனைத்து செப்பு உபகரணங்களும் வழங்கப்படும்.

காலம்:-ஒக்டோபர் 16ஆம் திகதி முதல் 19 வரை
16ஆம் திகதி காலை 6.30 முதல் மதியம் 12.30
17, 18, 19ஆம் திகதி காலை 6.30 முதல் 8.30

மேலதிக விபரங்களுக்கு
வாழும் கலை அமைப்பு
0771000750, 0712579504
(சி-9803)

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
2006 முதல் இன்றுவரை 1305 மாணவர்கள்.
40, பலாலி வீதி, இலுப்பையடி 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Grammar வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

SB Travels and Tours Pvt Ltd
இல. 212 கஸ்தூரியார் வீதியில் இயங்கி வரும் SB Travels and Tours Pvt Ltd இப்போது விசேட விலைக் கழிவுகளுடனான விமான பயணச் சீட்டுக்களை வழங்குகின்றது. விசா விண்ணப்பப்படிவம் 150/= நிரப்பி தரப்படும். Budjet Airlinesல் மதுரை சென்னை ரூ.23500 இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: 021 222 9555, 021 222 8555, 076 691 1080, 81, 076 691 1082, 83, 077 711 1228
(C-9717)

9வது ஆண்டில் சிகரம் முற்றிலும் புதிய வரவுகள்
UK, Australia, New Zealand, Canada, Malaysia, Singapore, Dubai, Qatar, Bahrain, Saudi Arabia
O/L உடன் STUDENT VISA - WORK VISA MIGRATION மூலம் வெளிநாடு சென்று கைநிறையச் சம்பாதிக்க
அல்லது
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் மாதம் 50,000/- வரை உழைக்க
Dip. in Business / Tourism 9ம் அணி
Hotel Management
100% VISA & JOB GUARANTEED
IT, Engineering, Nursing, Business Management உள்ளிட்ட விரும்பிய கற்கைநெறிகளுக்கு STUDENT VISA
New Zealand, Canada, Australia நிரந்தரக் குடியேற்றம்
FREE விசேட ஆங்கில வகுப்பு
அனுமதிகளுக்கு 077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY Business - Hospitality - English SCHOOL of HOSPITALITY
(C-9722)
175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

Certificate in Computer Network Engineering
+

இலவச PC HARDWARE பயிற்சி நெறி
Next Batch : 14-Oct-2017
Duration: 2 Months
ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
021-7306000, 076-7013060

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூட்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062
follow us cnrworldwideexpress

கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்
LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்

A/L தொழில்நுட்ப பிரிவு
SFT- S.சக்தி, ராகவன்
E.Tec - Mr.அருண்குமார், சேரலாதன்
B.Tec - Mr.திருக்குமரன்
- A/L 2019
SFT- விசை (திங்கள், வெள்ளி - 3.30 - 5.00 pm)
E.Tec -இயந்திரவியல் (செவ்வாய், வியாழன் - 3.30 - 5.00pm)
Bio Tec - நில அளவை, மட்டங்காணல் (செவ்வாய், வியாழன் - 3.30 - 5.00 pm)
- A/L 2018
SFT- பொறிமுறை சக்தி (செவ்வாய், வியாழன் - 3.30 - 5.00 pm)
E.Tec - இலத்திரனியல் (திங்கள், வெள்ளி - 3.30 - 5.00pm)
Bio Tec - நாற்றுக்கள் உற்பத்தி (திங்கள், வெள்ளி - 3.30 - 5.00 pm)
Paper Class அனுமதி இலவசம்
இடம் :
கொக்குவில் (குளப்பிட்டி சந்தி) உயர் கலைக்கல்லூரி
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
Techno World
ஆரம்பம்: 02.10.2017
தொடர்பு : 0770175346
(C-9785)
"கல்வியே கண்கள்"

# மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம் பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

01. சிவநாதன் கிருபானந்தாவும்
02. பெண் பாமினியும்
231, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
வழக்காளிகள்

எதிர்

வழ. இல: ஈடு/08/2013

01. மகேஸ்வரன் மகேந்திரனும்
02. பெண் சுந்தரவதனியும்
16, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

2017.08.15ஆம் திகதி இந் நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனையை நடத்த மன்று நியமித்துள்ளதால் அதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, கலைமகள் வீதி, இல:- 65/15 இல் அமைந்துள்ள ஆதனத்தில் நின்று 2017ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 01ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

தீர்வைத் தொகை

எதிராளிகள் வழக்காளிகளுக்கு ரூபா 1,200,000/= வும் மேலும் முதல் ரூபா 600,000/= இற்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 60% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 2013ம் ஆண்டு மார்கழி மாதம் 02ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 2014ம் ஆண்டு கார்த்திகை மாதம் 05ம் திகதி வரையுமான வட்டி ரூபா 330,000/= யும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் முழுத்தொகையும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 7.5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 26,500/= (இதில் நடைபெற்ற செலவு ரூபா 25,500/= நடைபெற வேண்டிய செலவு ரூபா 1000/= மேலதிகமாக சமயாசமயச் செலவு ரூபா.....) கொடுக்க வேண்டியுள்ளது.

ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை: "காளிக்குட்டி வயலும் கும்பா வயலும் மறுபிரிவும்" நிலப்பரப்பு அரையும் (நில.பர 1/2) அதற்குள் அமைந்துள்ள வீடும் கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இது 04.01.2011இல் நில அளவையாளர் என்.கேதீஸ்வரன் அளந்து தயாரித்த 1410ம் இலக்கப்படத்தின் படி2ம் துண்டாக நிலப்பரப்பு சைபர் குளி எட்டு தசம் ஐந்து (நில.பர 0 குளி 8.5) எனக் காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லை கிழக்கு தங்கரத்தினம் பெண் லீலாவதியின் ஆதனம் வடக்கு கையொழுங்கை மேற்கு 1ம் துண்டு ஆதனம் தெற்கு பொன்னம்பலவாணரின் ஆதனம் இதடங்கலும் இன்னும் இதற்குள் அமைந்த கிணற்றில் மேற்கெல்லை 1ம் துண்டு ஆதனத்திற்கு பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் புறநீங்கலாகவும் மிகுதிக் காணியின் (1ம் துண்டின்) வடக்கருகால் மேற்கொழுங்கையிலிருந்து இக்காணிக்குப் போக்குவரவு செய்யும் 3 அடி அகலப் பாதையுரித்தும்.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை (1/4) உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்) -1%
பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக் கோவையின்படி
விளம்பரச்செலவுகளும், பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்
விற்பனை கமிசன் 2 1/2%
விற்பனவு ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)
2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 28ந் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி

து.சிறீமோகன்,
பதிவாளர்/ பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(841)

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
UK-550/-Kg
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
5,000/= (பயிற்சியின் போது) 13,000/= (பயிற்சியின் பின்)
தகுதி: 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
0768226241
(C-9677)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பி எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வல்வெட்டித்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை
(C-9767)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
UK - 550/= (C-9678)
CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS- 0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

விற்பனைக்கு உண்டு
AC, TV, குளிர்சாதனப்பெட்டி, அலுமாரி, கட்டில், மோட்டார் சைக்கிள், மின்விசிறி, போட்டோ கொப்பி இயந்திரம், கடையில் பாவித்த அலுமாரிகள், மேசை, கதிரை, லைட் போட்டுகள், 2அயன் சேவ் பெட்டிகள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
076 851 4296
(C-9783)

VACANCIES
Customer Service Executive (Male only)
Requirements :
- No age limit
- Male or Female candidate
- should have excellent communication skills in English
- should have good computer literacy
- Experience in similar capacity would be a distinct advantage
Call only the person who have good knowledge of English walk in Interview
0768578474, 0212227077
careers.penguin@gmail.com
(838)

## 11 மாதக் குழந்தை...

பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இக்குழந்தை கடந்த இரு நாட்களுக்கு முன் திடீர் காய்ச்சல் காரணமாக வவுனியா ஹொரவப்பொத்தான வீதியில் உள்ள தனியார் மருத்துவ சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்ற நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.